மலர்-2 இதழ்-46 ஜூலை 16-31 2018 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

மாதமிருமுறை

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளியிடப்படும் இதழ்




# சென்னையை வளமாக்கும் காளிகாம்பாள்



# தற்கால உணவு முறையால் உடலில் ஏற்படும் பிரச்சனைகளை தீர்க்கும்

# வாயு முத்திரை

உடல் உழைப்பு இல்லாதவர்களுக்கு உடலில் வாயு அதிகமாகச் சேரும். தற்போது உண்ணும் பல உணவுகள் வாயுவை உண்டாக்கக்கூடியவை. அதனால், மூட்டு வாதம், கை, கால் வலி, ஏப்பம், அஜீரணம், மலக்காற்று பிரிதல், நெஞ்சு எரிச்சல், வயிற்றில் சத்தம், வயிற்று உப்புசம், வயிற்றுப் புண், கை கால் பிடிப்பு, நெஞ்சு குத்தல், நெஞ்சு வலி போன்றவை ஏற்படலாம்.

இதுபோன்ற பிரச்சனைகளை தீர்க்க உதவுகிறது வாயு முத்திரை.

ஆள்காட்டி விரல், கட்டை விரலின் அடிப் பகுதியைத் தொட்டுக்கொண்டு இருக்க வேண்டும். மற்ற விரல்கள் நேராக இருக்க வேண்டும். கட்டை விரல் நெருப்பையும், ஆள்காட்டி விரல் காற்றையும் குறிக்கின்றன. நெருப்பு விரலால் காற்று விரல் அழுத்தப்பட்டு, உடலில் உள்ள வாயுவைக் குறைக்கிறது (Supress) என்று சொல்லலாம். இந்த வாயு முத்திரை மேற்கண்ட பிரச்சனை களை சரி செய்யும். 10 நிமிடங்களிலேயே பலன் தெரியும்.

வாயுப் பிரச்சனை இருப்பவர்கள், தொடர்ந்து செய்யலாம். சிலருக்குத் தொடர்ந்து 10 நாட்கள் செய்யும்போது, மூச்சுத் திணறல் ஏற்படலாம். அவர்களுக்கு விசீங் பிரச்சனை இருக்க வாய்ப்புகள் அதிகம். எனவே, இதை அவர்கள் செய்ய வேண்டாம்.

முத்திரைகளின் கட்டளைகள்:

தரையில் விரிப்பை விரித்து, கண்கள் திறந்த வாறு கழுத்து மற்றும் முதுகுத்தண்டு நேராக இருக்கும்படி சம்மணம் போட்டு நிமிர்ந்து உட்காரவும். முடியாதவர்கள், நாற்காலியில் அமரலாம். ஆனால், பாதங்கள் தரையில் முழுமையாகப் பட வேண்டும். கால்களைக் குறுக்காகவோ, கால் மேல் கால் போட்டு உட்காரவோ கூடாது. படுக்கையில் செய்வோர், தலையணை இல்லாமல் முத்திரைகளைச் செய்யலாம்.

விரல் நுனிகள் தொட்டுக்கொண்டிருப்பதைக் கவனித்தாலே போதும். மூச்சு இழுத்துப் பிடிக்க தேவை இல்லை. சாதாரணமாக இருக்கலாம்.

வெறும் வயிற்றில் செய்வது சிறப்பு. தவிர, சாப்பிட்ட ஒன்றரை மணி நேரம் கழித்துச் செய்யலாம். பஸ், கார் போன்ற பயணங்களில்கூட முத்திரைகள் செய்யலாம்.

காலை 6, 7 மணிக்குள் செய்தால், முழு பலன் கிடைக்கும். ஒரு நாழிகை (24 நிமிடங்கள்) செய்யலாம். புதிதாகச் செய்பவர்களுக்கு, ஐந்து நிமிடங்களே போதுமானது.







# குபேரன் அருள் பெற

அமாவாசை, வியதீபாதம் தினம் நம் முன்னோர்கள் இறந்த திதி இவைகளில் தானம் செய்திட பணம் வரும். திருப்பதி வெங்கடாஜலபதி பத்மாவதி படம் வைத்து வழிபட பணம் வரும்.

வியாழக்கிழமை மாலை 4, 5 குபேரகாலம். இந்நேரத்தில் கோவிலுக்கு சென்று குபேரனை வழிபட்டு வர பணம் வரும். செல்வத்திற்கு உரிய மகாலட்சுமியை 24 வெள்ளிக் கிழமை தொடர்ந்து வழிபட பணம் வரும்.

ஸ்ரீரங்கம் தாயாரை வழிபட பணம் வரும். கனகதாரா தோத்திரம் ஸ்ரீசூக்தம் படிக்க பணம் வரும். அவரவர் நட்சத்திர மூலிகையை பணப்பெட்டியில் வைக்க பணம் வரும்.

ஜோடி கழுதைப் படம், ஓடும் வெள்ளைக் குதிரையை அடிக்கடி பார்த்து வர பணம் வரும். அவரவர் குல தெய்வத்தை தினந்தோறும் காலையில் பிரார்த்திக்க பணம் வரும்.

பசுவின் பிருஷ்ட ஸ்பரிசம் தனம் தரும். தினசரி அபிஜித் நேரத்தில் மதியம் 11.00 12.00 அவரவர் ஜென்ம நட்சத்திர அதிதேவதையை வணங்கிட பணம் வரும்.

| நட்சத்திரம் | அதிதேவதை |
|---|---|
| அஸ்வினி | சரஸ்வதி |
| பரணி | துர்க்கை |
| கார்த்திகை | அக்னி |
| ரோஹிணி | ப்ரஹ்மன் |
| மிருகசிரீஷம் | சந்திரன் |
| திருவாதிரை | பரமசிவன் |
| புனர்பூசம் | அதிதி |
| பூசம் | ப்ரஹஸ்பதி |
| ஆயில்யம் | ஆதிசேஷன் |
| மகம் | சுக்ரன் |
| பூரம் | பார்வதி |
| உத்திரம் | சூரியன் |
| அஸ்தம் | சாஸ்தா |
| சித்திரை | விஸ்வகர்மா |
| சுவாதி | வாயு |
| விசாகம் | முருகன் |
| அனுஷம் | லட்சுமி |
| கேட்டை | இந்திரன் |
| மூலம் | அசுரர் |
| பூராடம் | வருணன் |
| உத்திராடம் | கணபதி |
| திருவோணம் | விஷ்ணு |
| அவிட்டம் | வசுக்கள் |
| சதயம் | யமன் |
| பூரட்டாதி | குபேரன் |
| உத்திரட்டாதி | காமதேனு |
| ரேவதி | சனீஸ்வரன் |

– மு.கிருஷ்ணமோகன்
ஸ்ரீ காலபைரவி ஜோதிட நிலையம்
தொ.பே.எண்: 08526223399

# விளக்கேற்றும் முறை

பூஜைக்கு விளக்குகளை வெறும்தரையில் வைக்ககூடாது! அவற்றை வெள்ளி, செம்பு, பித்தளை, பஞ்சலோகம் முதலியவற்றால் ஆன ஒரு தாம்பளத்தின் மீதே வைக்கவேண்டும். அல்லது மரத்தினால் ஆன பலகையின் மீதாவது வைக்க வேண்டும்,அல்லது தலைவாழை இலையை பரப்பிஅதில் பச்சரசி சிறிது பரப்பி அதன்மேல் வைக்கவேண்டும். இந்த முறை அனைத்துவிளக்குகளுக்கும் பொருந்தும்.

விளக்கிற்க்கு விபூதி,குங்குமம்,மஞ்சள்,சந்தனம் என உச்சியில் ஒரு பொட்டும். அதன்கீழ் மூன்றும், அதன்கீழ் இரண்டும், அதற்கு கீழே இரண்டுமாக, ஆக எட்டு இடங்களில் பொட்டிடவேண்டும்.

உச்சியில் இடும்பொட்டு நெற்றியில் இடுவதாகவும் அடுத்த மூன்று பொட்டும் முக்கண் முத்தீ என்கிற சூரியன், சந்திரன், அக்கினி என்று கொள்ளவேண்டும். அடுத்த இரண்டு பொட்டுகள் கைகள்எனவும், கீழே இடும் பொட்டு இரு திருவடிகளாகவும் கருதி, இந்த எட்டு இடங்களிலும் பொட்டிட்டு வழிபடவேண்டும்.



# சென்னையை வளமாக்கும் காளிகாம்பாள்

சூரியன் கடக ராசியில் சஞ்சரிக்கும் காலத்தை ஆடி மாதம் என்று அழைக்கின்றோம். இந்த ராசி சந்திரனுக்கு சொந்த ஆட்சி வீடாகும். இந்த ராசியில் குருபகவான் உச்ச அமைப்பை பெறுகிறார். ஜலராசி என்ற அமைப்பை பெற்ற இந்த மாதம் அம்பாளுக்கு உரிய மாதமாக திகழ்கிறது. குரு பார்வையால் நன்மை ஏற்படவிருக்கும் ராசிக்காரர்கள் இந்த மாதத்தில் அம்மனுக்குரிய விரத நடைமுறைகளை பின்பற்றினால், அம்பாளின் சக்தியும் சேர்ந்தே கிடைக்கும்.

அந்த வகையில் தமிழகத்தில் பல்வேறு சிறப்பு வாய்ந்த அம்மன் சன்னதிகள் இருந்தாலும், சென்னையில் புகழ்பெற்ற ஒரு அம்மன் திருக்கோவிலை ஆடிமாத சிறப்பு கோவிலாக பார்ப்போம்.

காமாட்சி அம்மன், தனது இச்சா மந்திர சக்தியால் பன்னிரண்டு ஸ்தலங்களில் காட்சி தருகிறாள். அந்த பன்னிரண்டு தலங்களில் ஒன்றுதான் காளிகாம்பாள் திருக்கோயில், மேற்கு நோக்கி அர்த்த பத்மாசனத்தில் வலக்கால் தொங்கவிடப்பட்ட நிலையில், அங்குச பாசம் மேற்கையில் ஏந்தி, தாமரை வரத முத்திரையுடன், மூக்குத்தி மின்ன, மரகத பதக்க பொன் தாலியும், ஒட்டியாணம், கொப்பு, குழை, கங்கணம், பாதச்சிலம்பு மின்ன, காலை மூன்று அரக்கர்களின் மேல் வைத்த நிலையில் எழிற் கோலம் காட்டுகின்றாள். நாம் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் நீக்கினாலே அந்த பரம் பொருளுடன் சேர முடியும் என்பதை குறிப்பாக காட்டுகின்றாள் அன்னை.

“ஸமாசர ரமாவாணி
ஸவ்ய தக்ஷிண சேவிதா”

என்ற லலிதா சகஸ்ர நாமாவின் படி ஸ்ரீ மஹா லக்ஷ்மியும், ஸ்ரீ மஹா சரஸ்வதியும் தன் இரு கண்களாய் அமையப் பெற்றவள் காளிகாம்பாள், இந்த தாயாரால்தான் செல்வமும் கல்வியும் சென்னை நகரில் குவிந்திருப்பதாக கூறப்படுகிறது.

சிவசக்தித்தலமான இத்தலத்தில் எம்பெருமான் கமடேஸ்வரராகவும், அருணாச்சலேஸ்வரராகவும் எழுந்தருளி அருள் பாலிக்கின்றார் மற்றும் உண்ணா முலை அம்மன் சன்னதியும் உள்ளது. எனவே இத்தலத்தில் வழிபட்டால் காஞ்சி, அருணை ஆகிய இரு தலங்களையும் வழிபட்ட பலன் உண்டு. மேலும் கோவிலின் உள்ளேயே குரு சன்னதியும், பள்ளியறையும் உள்ளன. நெரிசல் மிகுந்த பாரி முனைப் பகுதி என்பதால் ஒரே ஒரு பிரகாரம். பிரகாரத்தில் தென் கிழக்கு மூலையில் கிழக்கு நோக்கிய சித்தி புத்தி வினாயகர் சன்னதி. சுப்பிரமணியர் வட கதிர் காம முருகராகவும், அகோர வீர பத்திரர், மஹா காளி, வேத மாதா காயத்ரி, துர்கா, விஸ்வ கர்மாஆகியே’ருக்கு தனித்தனி சந்நிதிகள், வீரபத்திரர் சன்னதியின் விமானத்தில் ஆட்டுத்தலையுடன் கூடிய ஆணவம் நீங்கிய தட்சன் வீர பத்திரரை வணங்கும் சுதை சிற்பம் அற்புத மாக உள்ளது. வடக்கு நோக்கிய துர்க்கை அம்மன் செப்புத் திருமேனி, எழிலாக அருட்காட்சி தருகின்றாள் அன்னை.

வெளி பிரகாத்தில் வட கிழக்கு முலையில் ஆடல் வல்லான் சன்னிதி பிரம்மோற்சவ காலங்களில் அம்மனின் அலங்கார மண்டபமாகவும் விளங்குகின்றது. பரிவார தேவதை கடல் கண்ணி, கடல் தீர்த்தம் எனவே அன்னை நெய்தல் நில காமாட்சி என்றும் அழைக்கப்படுகின்றாள், தல விருட்சம் மா மரம்.

காளி என்றாலும் சாந்த ரூபத்தில் காமாஷியாக எழிற் கோலம் காட்டுகின்றாள் அன்னை. அவள் சன்னதியில் நின்றாலே ஒரு நிம்மதி அம்மையை தரிசித்தவுடன் நம் பாவமெல்லாம் விலகுகின்றன. ஆதி சங்கர பகவத் பாதாள் ஸ்தாபித்த ஸ்ரீ சக்ர அர்த்த மேருவும் அம்மையின் முன் உள்ளது. அர்ச்சனை அர்த்த மேருவிற்க்குத்தான் நடைபெறுகின்றது. காளிகாம்பாள்

ஆலயம் 3000 ஆண்டு பழமையானது. மட்டுமின்றி வரலாற்று சிறப்புடையதாகவும் திகழ்கிறது.

ஸ்ரீசக்கரம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருப்பதால் அம்பாள் முன் வைக்கப்படும் அனைத்து வேண்டுதல்களும் குறைவின்றி வெற்றி பெறும்.

இத்திருத்தலம் பல்வேறு காலத்தில், பல்வேறு வகையில் புதுப்பிக்கப்பட்டு வந்துள்ளது. தற்போதுள்ள ஆலயம் 1639ம் ஆண்டு விஸ்வகர்மா குலத்தவரால் கட்டப்பட்டு, இன்றும் சீரும், சிறப்புமாக பராமரிக்கப்பட்டு வருகிறது.

வீர சிவாஜியும், மஹா கவி பாரதியாரும் வழிபட்ட தலம், விஸ்வ கர்மாவிற்கு தனி சன்னதி உள்ள தலம், ஆதி சங்கரர் ஸ்ரீ சக்ரம் ஸ்தாபித்த தலம் என்ற அனைத்து பெருமைகளையும் கொண்ட தலம்

காளிகாம்பாள் தலத்தில் குங்குமம் பிரசாதம் பெற்றாலே வாழ்வில் உயர்வும், மோட்சமும் கிடைக்கும் என்று கூறப்படுகிறது.

காளிகாம்பாள் மகாலட்சுமியையும், சரஸ்வதியையும் தன் இரு கரங்களாக பெற்றிருப்பதாக புராணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

காளிகாம்பாள் ஆலயத்தின் பரிவார தேவதை கடல் கன்னியாகும்.

கமடேஸ்வரி, கோட்டையம்மன், சென்னியம்மன், நெய்தல் நில காமாட்சி என்றும் ஆயிரம் திருநாமம் அம்பாளுக்கு இத்தலத்தில். மச்ச புராணம், வாமன புராணம், கூர்ம புராணம், லிங்க புராணம், பவிஷ்ய புராணம் முதலிய புராணங்களில் இத் திருக்கோவிலைப் பற்றிய குறிப்புக்கள் உள்ளன.

காளிகாம்பாள் ஆலயம் கிழக்கு நோக்கி உள்ளது. அம்பாள் மேற்கு நோக்கி வீற்றிருக்கிறாள்.

ஆதிபராசக்தி தன்னை பல சக்திகளாக தோற்றுவித்த சித்தாடல் செய்து வருகிறாள். அந்த அபூர்வ சக்திகளுள் ஒருவளே அன்னை காளிகாம்பாள்.

காளிகாம்பாளின் அவதாரம் நீலியாய், சூலியாய், காளியாய் உருவகப்படுத்தப் பட்டுள்ளது.

காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம், தம்பட்டம், வீண் பெருமை, தன்நிலை உணராமை போன்றவற்றை காளிகாம்பாளை வழிபட, வழிபட நம் மனதில் இருந்து நீங்கச் செய்யலாம்.

காளிகாம்பாள் அருள்புரியும் இத்தலத்தில் இந்திரன், குபேரன், விராட் புருஷனான ஸ்ரீ விஸ்வகர்மா ஆகியோர் போற்றி துதித்துள்ளனர்.

காளிகாம்பாள் அவதரித்த இடத்தை நம் முன்னோர்கள் "சொர்ணபுரி" என்று பெயரிட்டு அழைத்து வந்தனர்.

நாகலோக கன்னிகளும், தேவலோக கன்னிகளும் அன்னை காளிகாம்பாளை வழிபட்டு பூர்வ ஜென்ம புண்ணியங்களை அடைந்தனர்.



காஞ்சி விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள், பன்றிமலை சுவாமிகள், மயிலை ஞானிகள் சத்குரு ஸ்ரீசதாசிவபிரும்மேந்திரர், காயத்ரி சுவாமிகள், தவத்திரு ராமதாசர் உள்பட பல மகான்கள், ஆன்மீகப் பெரியோர்கள் காளிகாம்பாளை வழிபட்டு பேறு பெற்றுள்ளனர்.

இத்தலத்தில் வெள்ளிக்கிழமை தோறும் கன்னி பூஜை, கோ பூஜை, திருவிளக்கு பூஜை நடத்தப்படுகிறது.

இத்தலத்தில் நடைபெறும் சுவாசினி பூஜை சிறப்பு மிக்கது. இந்த பூஜை சுமங்கலிகளுக்கு விசேஷ அருள் தருவதாகும்

இத்தலத்தில் அமாவாசை தோறும் ஸ்ரீகாயத்ரி தேவிக்கும், விஸ்வ பிரம்மத்துக்கும் விஸ்வகர்ம சிறப்பு வழிபாடுகள் நடத்தப்படுகிறது.

காளிகாம்பாள் மொத்தம் 12 அம்சங்களைக் கொண்டவள். அதில் ஒரு அம்சம், காஞ்சீபுரத்து காமாட்சி அம்மனாகும்.

இத்தலம் இரு பிரகாரங்கள் கொண்டது. உள் பிரகாரத்தில் அருணாசலேஸ்வரர், நவக்கிரகங்கள், வள்ளிதெய்வானை சமேத முருகர், ஸ்ரீ வீரபகாமங்கர், அவர் சீடர் சித்தையா, ஸ்ரீ கமடேஸ்வரர், ஸ்ரீதுர்கா, ஸ்ரீ சண்டிமகேஸ்வரர், பைரவர், பிரம்மா, சூரியசந்திரர்கள் உள்ளன. வெளிப்பிரகாரத்தில் சித்தி விநாயகர், கொடிமரம், வடகதிர்காம முருகன், ஸ்ரீசித்தி புத்தி விநாயகர், ஸ்ரீகாயத்ரி, ஸ்ரீதுர்கா, யாகசாலை, ஸ்ரீநடராசர், ஸ்ரீமகாமேரு, ஸ்ரீவீரபத்திர மகா காளியம்மன், ஸ்ரீ நாகேந்திரர், ஸ்ரீவிஸ்வ பிரம்மா சன்னதிகள் அமைந்துள்ளன.

திருமணமாகி குழந்தை இல்லாதவர்கள் ஸ்ரீ காளிகாம்பாள் கருவறையில் உள்ள மூலவருக்கு மஞ்சளால் அபிஷேகம் செய்து, அந்த மஞ்சளை பயன்படுத்தி வந்தால் விரைவில் பலன் கிடைக்கும்.

செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் ராகு காலத்தில் எலுமிச்சை பழம் தீபம் ஏற்றி வழிபடுவது கூடுதல் நன்மை தரும்.

இத்தலத்தில் மேற்கு நோக்கிய நிலையில் உள்ள ஸ்ரீஆஞ்சநேயரை வழிபட்டால் நினைத்த காரியம் கைகூடும்.

இத்தலத்தில் தம்புச் செட்டித் தெருவில் உள்ள கிழக்கு கோபுர வாசல், "குண வாயில்" என்றும், அரண்மனைக்காரன் தெருவில் உள்ள மேற்கு கோபுர வாசல் "குட வாயில்" என்றும் அழைக்கப்படுகிறது.

சைவம், வைணவம், சாக்தம், கவுமாரம், காணபத்யம், சவுரம் ஆகிய 6 சமயங்களுக்கும் பொதுவானவளாக காளிகாம்பாள் இயங்குகிறாள். இத்தலம் சிவனும்சக்தியும் அருள்பாலிக்கும் தலமாக கருதப்படுகிறது. இத்தலத்தின் உற்சவர் பெயர் பெரிய நாயகி.

காளிகாம்பாள் தலத்தில் உள்ள ஒவ்வொரு சன்னதியும், பகுதியும் வாஸ்து முறைப்படி அமைக்கப்பட்டுள்ளது.

இத்தலத்தின் வடமேற்கு பகுதியில் அகோர வீரபத்திர சுவாமி உள்ளார். பவுர்ணமி தினத்தன்று அவருக்கு வெற்றிலை மாலை சார்த்தி வழிபட்டால் பில்லி, சூனியம், ஏவல் போன்றவை விலகி விடும்.

"உள்ளம் உருகுதய்யா..." என்று டி.எம். சவுந்தராஜன் பாடிய பாடலை இயற்றியவர் ஸ்ரீ ஆண்டவன் பிச்சி என்பவர் ஆவார். 1952ம் ஆண்டு அவர் காளிகாம்பாள் கோவிலில் உள்ள வடசுதிர்காம முருகப்பெருமான் சன்னதி முன்பு அமர்ந்து இந்த பாடலை பாடினார். இத்தலத்தின் தல விருட்சமாக மாமரம் உள்ளது.

கோவிலின் வாசலில் இருக்கும் கிழக்கு ராஜகோபுரம் 1983ம் ஆண்டு கட்டப்பட்டது.

இந்த கோவில் கடற்கரையில் இருந்த போது காளிகாம்பாள் மிகவும் உக்கிரமாணவளாக இருந்ததாகவும், தம்பு செட்டி தெருவுக்கு மாறிய பிறகு சாந்தம் ஆகி விட்டதாகவும் கூறப்படுகிறது.

காளிகாம்பாலுக்கு "நெய்தல் நில காமாட்சி" என்றும் ஒரு பெயர் உண்டு.

மச்ச புராணம், வாமன புராணம், கூர்ம புராணம், லிங்க புராணம், பவிஷ்ய புராணம் ஆகிய புராணங்களில் இந்த கோவில் பற்றி குறிப்புகள் உள்ளது. இந்திரன், குபேரன்,

வருணன், வியாசர், பராசரர், அகத்தியர், ஆங்கீ ரேசர், புலஸ்தியர், விராட புருஷன் விஸ்வகர்மா ஆகியோர் இத்தலத்தில் வழிபட்டுள்ளனர்.

புராணங்களில் இத்தலம் சொர்ணபுரி, பரதபுரி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தலத்துடன் தொடர்புடைய சரித்திர சிறப்பு பெற்ற நிகழ்ச்சிகள் கோவிலில் அதை சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளன.

இத்தலத்தில் வழிபட்டால் காஞ்சீபுரம் காமாட்சி அம்மனையும், திருவண்ணாமலை அருணாசலேஸ்வரரையும் வழிபட்ட பலன் கிடைக்கும். சிவனுக்கும், பார்வதிக்கும் ஏற்பட்ட ஊடலை பிரதிபலிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஆருத்ரா தரிசனம் முடிந்து சிவன்பார்வதி திரும்பி வரும்போது, ஊடல் உற்சவம் நடத்தப்படுகிறது.

இத்தலத்தில் பூந்தேர், கிண்ணித்தேர், வெள்ளித் தேர் என்று மூன்று வகையான தேர்கள் உள்ளன. இத்தலத்தில் மொத்தம் 33 பஞ்சலோக சிலைகள் உள்ளன. தொல் பொருள் ஆய்வுத் துறையினர் இதை பதிவு செய்துள்ளனர்.

இந்த கோவில் உள்ளது போன்று இந்தியாவில் வேறு எங்கும், எந்த தலத்திலும் கிண்ணித் தேர் இல்லை. தினமும் இரவு இத்தலத்தில் நடக்கும் அர்த்த ஜாம பூஜை மிகவும் சிறப்பு வாய்ந்தது.

மற்ற மாதங்களை விட கார்த்திகை மாதம் இத்தலத்தில் கோலாகல பூஜைகள் நடத்தப்படும். அதுவும் காளி பிறந்த தினமான கார்த்திகை அமாவாசை தினத்தன்று காளி ஜெயந்தி விழா மிக சிறப்பாக நடைபெறும். இத்தலம் தோன்றி சுமார் 3 ஆயிரம் ஆண்டுகள் இருக்கலாம் என்று நிபுணர்கள் கணக்கிட்டுள்ளனர்.

காளிகாம்பாள் சன்னதி முன்பு 12 கால் மண்டபம் இருக்கிறது. அந்த மண்டபத்தில் சிறிது நேரம் அமர்ந்து தியானம் செய்தால் மனதுக்கு புத்துணர்ச்சி கிடைக்கும்.

இத்தலம் சென்னையின் பழமையான தலங்களில் ஒன்று, சென்னை பிராட்வேயிலிருந்து மிக அருகில் அமைந்துள்ளது இத்தலம். சென்னையையே சிறப்பாக வைத்திருக்கும் இந்த அம்மனை நாமும் சென்று வணங்குவோம்.

–ஆசிரியர்: நாகராஜன்,
தொடர்பு எண்: 08825844033.





# சாப்பாட்டு சம்பிரதாயம்



“கல்யாணம், மத்த விசேஷம், சாதாரணமாக வீடுகளில் போஜனம் எப்படி சாப்பிடுறோம்?'' என்று பெரியவா கேட்டார்.

‘வாழை இலைலே எல்லா அயிட்டம் வச்சதும் போஜனம் சாப்பிடறோம்’ என்றார் அருகிலிருந்தவர்.

“அது சரி எல்லாரும் போஜனம் பண்றச்சே எதை எதை எந்த ஆர்டர்ல எடுத்துக்குவேள்”

‘‘ஓ அதை கேக்கறேளா பெரியவா. மொதல்ல’ சாம்பார், அடுத்தது ரசம், அப்புறம் பாயசம், பட்சணம், கடைசியா மோர்” அங்கே இருந்த பலர் சேர்ந்து சொன்னா.

“ஏன் இப்படி ஒரு ஆர்டர் வைச்சிருக்கா தெரியுமோ?” மகாபெரியவா இப்படி ஒரு கேள்வி கேட்பார் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. மௌனமாக இருந்தார்கள். தெரியும் அவரே பதில் சொல்வார் என்று.

இலையை போட்டவுடனே வாழ்க்கை பசுமையா இருக்கேன்னு அதுல மயங்கிடாதேன்னு தண்ணிய தெளிக்கிறா, அப்பறம் பாயசம் அதுக்கு எதிரில பச்சடி எதுக்கு வைக்கிறா தெரியுமா பாயசத்தால பிறந்த ஸ்ரீ ராமனையும் தயிர்வெண்ணைப்பிரியனான ஸ்ரீகிருஷ்ணனையும் சாப்பிடும்போது நிணைக்கனும் என்பதற்காகத்தான்

“மொதல்ல குழம்பு. இதுல, ‘தான்’ இருக்கு. தான் என்பது வெண்டக்கா, சுண்டக்கா, பூசணி, பரங்கி, கத்திரி, முருங்கைக்கா ஏதோ ஏதோ இருக்குமே அது தான் ‘தான்’ என்பது இல்லையா. நாம எல்லாம் பொறந்து வெவரம் தெரிஞ்சதுமே ‘தான்’ என்கிற அகங்காரம் மனசுல வந்துடறது. அதனால் நாம ‘குழம்பி’ப் போயிடறோம். அந்தத் ‘தானை’ கொஞ்சமா தீர்த்துட்டு, அடுத்த கட்டத்துக்குப் போறோம்.

அப்போ ‘தான்’ இல்லாததால் ஒரு தெளிவு வந்துடறது இல்லையா. அதாவது ‘ரச’மான மன நிலை. அதுதான் ரசம். ‘தான்’ இல்லாம தெளிவா இருக்கற மனசுல ‘ரச’மான எண்ணம் வருது.

அது வந்ததும் எல்லாமே இனிப்பா பாயசமாகவும், பட்சணமாகவும் ஆயிடறது..

கடைசியா மோர். மோர் என்கிறது என்ன எப்படி கிடைக்கிறது?

பால்லேர்ந்து தயிர் கிடைக்கறது. அதுலேர்ந்து வெண்ணெய் எடுக்கறா. அதைக் காய்ச்சி நெய்வார்றது. இதெல்லாம் எடுத்தப்புறம் மிஞ்சி இருக்கிறது மோர். அதாவது மோர்லேர்ந்து எதையும் பிரிச்சு எடுக்க முடியாது.

அதாவது மோருக்கு அடுத்த பிறவி இல்லை.

இந்த போஜன ஸம்ப்ரதாயத்திலிருந்து என்ன புரியறது?

நாமளும் அகங்காரத்தைவிட்டு மனசு தெளிஞ்சு ரசமா வாழ்க்கையை அனுபவிச்சு, யாருக்கும் எந்த உபத்ரவமும் பண்ணாம எல்லாருக்கும் இனிமையாக வாழ்ந்து கடைசில பரமாத்மாவோட கலந்துட்டா. அதுக்கு அப்புறம் எதுவுமே இல்லை. அதாவது ‘‘நோ மோர்!”

சாதரணமான மக்களுக்கும் இந்த அடிப்படை விஷயம் போய்ச் சேரணும். ஒவ்வொரு நாளும் போஜனம் பண்ணறச்சே ஒரு நிமிஷமானும் இதை நினைச்சுப் பார்த்து எல்லாரும் பகவானோட திருவடியைப் பற்றிக்கணும். அப்படிங்கற உயர் வான எண்ணத்துலதான் நாம தினமும் அனு சரிக்கற போஜன முறையையே நம்ம வாழ்க்கைத் தத்துவத்தை உணர்த்தற மாதிரிதான் அமைச்சிருக்கா!” சொல்லி முடிச்சார் ஸ்ரீமகாபெரியவா.

ஆன்மிகமலர் டிரஸ்ட்
Tamilnadu Government Redg.304/2016
எங்கள் பணிக்கு உங்களால் முடிந்த உதவிகளை செய்யலாம்.

AANMEEGA MALAR TRUST
ACCOUNT NO. 310601011001269
IFSC CODE:VIJB0003106 MICR CODE: 600029043
VIJAYA BANK (KODAMBAKKAM BRANCH)
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
மேலும் தொடர்பு கொள்ளவும் 8825844033

## சந்திரன் தாக்கம் நிறைந்த திருப்பதி

# திங்கள் தங்கினால் திகட்டா பலன்

## பக்தர்களை அடைத்துவைப்பதன் ரகசியம்...

இந்தியாவில் சந்திரன் தாக்கம் அதிக அளவில் உள்ள இடம் திருப்பதி ஆகும். சந்திரன் சக்தி மிகுந்த கோயில் என்பதால் மனம் நிம்மதி உண்டாகிறது.

திருமலை தரிசனம் மனதுக்கு இனிமையான அனுபவமாகும் ஸ்ரீராமானுஜர் யந்திரசக்ரங்கள் பதித்துள்ளதால் அவற்றின் சக்தி கடல் அளவு என்பர்.

கந்த புராணத்தில் இந்த ஸ்தலம் பற்றி சொல்லும்போது

பாபநாசம் தீர்த்தம் பாவங்களை போக்கும், செய்வினை தோஷம், வறுமை போக்கும் மற்றும் சந்ததி விருத்தி உண்டாகும்.

பிரபஞ்ச சக்தி ஆற்றல் இங்கு சூட்சமமாக இயங்குவதால் நமது மூளை பல மடங்கு வேகத்துடன் செயல்படுகிறது, இதனால் தன்னம்பிக்கை பலமடங்கு அதிகரிக்கிறது.

வாஸ்துப்படி வட கிழக்கில் அருவி அமைந்து பள்ளமாக உள்ளது தெற்கே உயரமான மலைகள் உள்ளன.

வடக்கு தாழ்ந்து தெற்கு உயர்ந்தால் அந்த இடம் மிகவும் பிரபலம் அடையும் மக்கள் கூட்டம் அலைமோதும் செல்வம் மலை போல குவியும்.

உலகிலேயே சந்திரனை முதலில் பார்ப்பவர்கள் ஜப்பானியர்கள்தான் சந்திரன் கதிர் கள் அதிகளவில் ஈர்த்து கொள்வதால்தான் அவர்கள் அறிவாற்றல், நுண்ணறிவு, பொருளாதார வளர்ச்சி யுடன் உள்ளார்கள் .

அதுபோல இந்தியா வில் சந்திரன் தாக்கம் அதிக அளவில் உள்ள இடம் திருப்பதி ஆகும்.



சந்திரன் சக்தி மிகுந்த கோயில் என்பதால் மனம் நிம் மதி உண்டாகிறது.

மூலிகைகள் அதிகம் இருப்பதால் ஆரோக்கியம் உண்டாகிறது.

மகான்கள் நிறைந்த பூமி என்பதால் அருளாசியும் நிறைந்து காணப்படுகிறது.

வாஸ்துப்படி மிக பலமாக இருப்பதால் இத் திருக்கோயில் மிக அதிக சக்தியுடன் உள்ளது. இந்தியாவின் அதிக செல்வம் உள்ள கோயில் இதுதான்.

கலி காலத்திலும் பெருமாள் பக்தர்களுக்கு உதவி செய்வதை பலர் பக்தியுடன் சொல்கின்றனர். குல தெய்வம் இல்லாதவர்கள் திருப்பதி பெருமாளை தங்கள் குல தெய்வமாக வணங்குகிறார்கள்.

நடந்து நாம் மலை ஏறினால் அக்குபஞ்சர் சிகிச்சையாக உடல் ஆரோக்யத்திற்கு உதவுகிறது நிமிர்ந்து மலை ஏறுவதால் நமது உடலில் மூலாதார சக்கரங்கள் நன்கு சுழலும் சந்திர தசை மற்றும் சந்திர புக்தியால் நடப்பவர்கள், தோல் நோய் உள்ளவர்கள், மன அழுத்தம் மற்றும் மன நிலை பாதிக்கப்பட்டவர்களுக்கு இத் திருக்கோயில் சிறந்த பரிகாரத் தலமாகும்.

சந்திரன் தாக்கம் உள்ள இடத்தில் சந்திரனுக்குரிய திங்கட்கிழமை இரவு தங்குவது சிறப்பாகும். அந்த வகையில் திங்கள் கிழமை திருமலை திருப்பதியில் தங்கினால் திகட்டாத பலன்கள் கிடைக்கும்.

அதே நேரம் திருப்பதி மலை மீது எவ்வளவு நேரம் இருக்கிறார்களோ அவ்வளவு நன்மையை தரும்.

திருப்பதி போனாலே அனைவரையும் போட்டு பூட்டி வைப்பார்கள் நான் வரவே மாட்டேன் என சொல்லும் அன்பர்கள் தான் அதிகம் காரணம் என்ன தெரியுமா உங்களுக்கு..

அதே போல அங்கு சென்றவுடன் ஜெயிலில் போடுவது போல அனைவரையும் ஒரு அறையில் போட்டு பூட்டி வைப்பதின் நோக்கம் திருப்பதிக்கு வரும் பக்தர்கள் பதினோரு மணி நேரம் மலை மேல் இருக்க வேண்டும் என்பது ஐதீகம்



ஆகையால் தான் அனைவரையும் போட்டு ஒரு அறையில் பூட்டுவதை வழக்கமாக கொண்டுள்ளனர்.

அந்த அறையில் மவுனமாக இருந்து உங்கள் வேண்டுதலை செய்யலாம்.

மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், கன்னி, துலாம், விருச்சிகம், மகரம், மீனம் லக்னம் உடையவர்கள் அனைவரும் திருப்பதி வெங்கடேச பெருமாளை அதிகம் பிடித்து கொள்ள வேண்டும்.

# அத்திப்பழத்தின் மகிமைகள்!

அத்திப் பழங்கள் பழமாகவும், உலர் பழமாகவும் பயன்படுத்தப்படுகிறது. அத்திப் பழம் என நாம் பார்க்கக் கூடியது உண்மையான பழமல்ல. அது பூவேயாகும்.

அத்திமரத்தில் விநோதமான பூவும் விதைகளும் சேர்ந்தே பழம் எனும் ஒரு தோற்றத்தை தருகின்றது. அத்திப் பழங்கள் 68 மீட்டர் உயரம் வரை வளரக்கூடிய மரங்களில் காய்க்கின்றன.

அதிசயமாக கிடைக்கும் அத்திப்பழம் பல்வேறு மருத்துவப் பண்புகளைக் கொண்டுள்ளது.

இதில் சீமை அத்திப்பழம், நாட்டு அத்திப்பழம் என இரண்டு வகை உண்டு. அத்திப்பழத்தில் இரத்தத்தை விருத்தி செய்யக்கூடியதும், இரத்தத்தை சுத்தப்படுத்தக்கூடியதுமான உயிர்ச் சத்துக்கள் அதிகம் காணப்படுகின்றன.

.அத்திப் பழங்களில் 84% பழக்கூடும் 16% தோலும் இருக்கும். அத் திப் பழங்களில் வேறு எந்தப் பழத்திலும் இல்லாத அளவு கால்சியம்,அதிக நார்ச் சத்து, புரதம்,இரும்புச்சத்து, வைட்டமின், தயாமின், வைட்டமின் பி, ஆகியவை உள்ளது.

நார்ச்சத்து அதிகம் காணப்படுவதால் உண்ணும் உணவு எளிதில் ஜீரணமாகி தேவையற்ற இடங் களில் கொழுப்பு சேருவது தடுக்கப்படுகிறது..

உலர்ந்த அத்திப் பழங்களை தேனில் ஊற வைத்து சாப்பிட்டால் அளவற்ற போஷாக்கை பெற லாம். உலர்த்திப் பொடி செய்து ஒரு ஸ்பூன் வீதம் பாலில் போட்டும் சாப்பிடலாம்.

அத்திப் பழம் ஓர் ஒப்பற்ற மலமிளக்கியாகும் உலர்ந்த அத்திப் பழங்களை இரவு தண்ணீரில் ஊற வைத்து காலையில் எழுந்தவுடன் பழத்தை சாப்பிட்டு அந்த ஊற வைத்த தண்ணீரையும் குடிக்க எத்தனை கடினமான மலமும் இறுகி வெளியேறும். இவ்வாறு 1020 நாள் சாப்பிட உள்மூலம், வெளிமூலம், குடல் தள்ளல் ஆகிய நோய்கள் குணமாகும்.

அத்திப் பழம் சீரண சக்தியை தூண்டும். தினசரி சாப்பிட்டு வர ஆரோக்கியம் பெருகும். உடல் உ;ணத்தை தணிக்கும். வாய்ப்புண் போன்ற உபாதைகள் அகலும்.

அத்திப் பழம் உடலுக்கு குளிர்ச்சியூட்டக் கூடியது. பெண்களின் வெள்ளைப்படுதலையும் போக்கும்.

நாட்டு அத்தியின் பாலை, மரு, மூலம் போன்ற வற்றில் போட்டு வர அவை சுருங்கி விடும். உபாதைகள் குறையும்.

அத்தி மரத்தை வெட்டினால் பால் வடியும் இது துவர்ப்பு மிக்கதாகும். அடிமரத்தின் கீழ் வேரைப் பறித்து வேரின் நுனியைச் சீவி விட்டால் பால் வடியும்.

இந்த நீரை தினமும் 300 மி.லி வெறும் வயிற்றில் குடித்து வந்தால் நீரிழிவு குணமாகும்.

போதைப் பழக்கம் மற்றும் இதர வியாதி களால் ஏற்படும் கல்லீரல் வீக்கத்தைக் குணமாக்க அத்திப்பழங்களை காடியில் (வினிகர்) ஒருவாரம் வரை ஊற வைக்க வேண்டும். அதன்பின் தினசரி இரண்டு பழங்களை ஒரு வேளை சாப்பிடலாம்.

தினசரி 2 ப ழ ங் க ளை சாப்பிட்டால் உடலில் இரத்த உற்பத்தி அதி கரிக்கும். உடலும் வளர்ச்சி அடைந்து பருமனடையும்.

தினசரி இரண்டு அத்திப்பழங்களை சாப்பிட்டு வந்தால் உடல் முழு அளவு ஊட்டச்சத்தினைப் பெறும்.

சீமை அத்திப்பழம் வெண்குஷ்டத்தை குணமாக்குகிறது. அரை கிராம் காட்டு அத்திப்பழத்தை தினசரி ஒரு வேளை சாப்பிட்டு வந்தால் வெண்புள்ளிகள், வெண் குஷ்டம், தோலின் நிறமாற்றம் ஆகியவை குணமாகும். அதைப் பவுடராக்கி பன்னீரில் கலந்து வெண் புள்ளிகள் மீது பூசலாம்.

குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் தேவையான அனைத்து சக்திகளையும் உள்ளடக்கிய அற்புத பூ-கனி இந்த அந்திப்பழமாகும்.







நின்ற கோலத்தில் பெருமாள்

# 40 வருடம் ஜலவாசம் 48 நாட்கள் மனவாசம்



பெருமாள் குடிகொண்டுள்ள குளம்

## குளத்தில் குடிகொண்ட பெருமாள்

40 வருடம் ஜலவாசம், 48 நாட்கள் பக்தர்களுக்கு காட்சி, பின்பு மீண்டும் ஜலவாசம். இது தொடர்ந்து தொன்று தொட்டு நடைபெற்று வருகிறது.

காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் திருக்கோயிலில், நூற்றுக்கால் மண்டபத்தின் வடக்கே இரண்டு குளங்கள் உள்ளன. இதில் தென்திசையில் உள்ள நீராழி மண்டபத்தின் கீழே நீருக்கு அடியில் உள்ள ஒரு மண்டபத்தில் தன்னை மறைத்துக்கொண்டு இருக்கிறார் அத்தி வரத பெருமாள்.

இவர் ஜலவாசம் செய்யும் இந்த குளத்தின் நீர் என்றும் வற்றுவ தில்லையாதலால் பெருமாள் யார் கண்ணுக்கும் புலப்பட மாட்டார்.

பெருமாளின் தாருமயமான திருமேனி (மரத்தினால் செய்யப்பட்டது) மிகப்பெரிய அத்தி மரத்தால் வடித்து, பிரம்ம தேவனால் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

பிரம்மனின் யாகத் தீயினின்று தோன்றியதால் சிறிது பின்னப்பட்டுவிட்டார். எனவே அசரீரி மூலம் தன்னை ஆனந்தத் தீர்த்தத்தில் விட்டுவிட்டு பழைய சீவரத்திலிருந்து சிலையை காஞ்சியில் பிரதிஷ்டை செய்யுமாறு கூறினார்.

பெருமாள் பெரும் உஷ்ணத்தைத் தணிக்கவே தெப்பக் குளத்தில் வாசம் செய்கிறாராம்.

அப்படியே இவரை வெள்ளித் தகடு பதித்த பெட்டியில் சயனக் கோலத்தில் வைத்து ஆனந்த புஷ்கரணி மண்டபத்தின் நடுவே நீரில் வைத்து விட்டனர்.

பழைய சீவர பெருமாளை தேவராஜப் பெருமாள் என பிரதிஷ்டை செய்து விட்டனர்.

ஆனந்த தீர்த்தம் என்றும் வற்றாது. எனவே நீரை இறைத்து விட்டு ஆதி அத்தி வரதரை வெளியே கொண்டு வருவார்கள்.

வெள்ளி தகடுகள் பதித்த பெட்டியில் சயன கோலமாக, அமிர்தசரஸ் என்னும் அந்த குளத்தில் மூழ்கியிருக்கும் பெருமாள், 40 வருடங்களுக்கு ஒரு முறை, மேலே வந்து, சயன மற்றும் நின்ற கோலமாக எழுந்தருளி இருப்பார்.

வசந்த மண்டபத்தில் 48 நாட்கள் பக்தர்களுக்குசேவை சாதிப்பார்...

நின்ற கோலத்திலும், சயனக் கோலத்திலும் தரிசனம் தந்தபின் மீண்டும் அனந்தத் தீர்த்தத்தில் சயனித்து விடுவார்.

பக்தர்கள் மிகவும் தொன்மையான இந்த அத்தி வரதரை, உற்சவ விழா வழிபாட்டோடு கண் குளிர தரிசிக்கலாம்.

பிறகு மீண்டும் வெள்ளி தகடுகள் பதித்த பெட்டியில் வைத்து குளத்தில் மூழ்கடிக்கப் பட்டுவிடுவார்.

இந்த வைபவம், 1939 ஆண்டும், 1979 ஆண்டும் நடைபெற்றது. இதில் பல்வேறு ஊர்களிலிருந்து பக்தர்கள் கலந்து கொண்டு பெருமாளின் அருள் பெற்று திரும்பினர். இந்த வைபவம் அடுத்த வருடம் (2019–இல்) காஞ்சியில் நடைபெறவுள்ளது.

15.07.2019 ஆண்டு அத்திவரதர் பக்தர்களுக்கு காட்சி அளிக்க அமிர்தசரஸ் குளத்திலிருந்து வெளியே வரவிருக்கிறார். தொடர்ந்து 48 நாட்களுக்கு பக்தர்களுக்கு காட்சியளிக்க உள்ளார். இந்த அற்புத வைபத்தில் அவசியம் பக்தர்கள் கலந்து கொண்டு பெருமாளின் ஆசியை பெறுவோம்.

– ஷ்யாம் சுந்தர்



படுத்த நிலையில் பெருமாள்

# ஆன்மாவின் பூரணத்துவத்திற்கான பிரயாணம்

பூஜ்ய குருதேவர் அருளுகிறார்:

"மறுபிறவி என்பது, ஆன்மா, பூவுலக மட்டத்தில் இறைவனுடனான என்றுமழியாத பூரண ஐக்கியம் என்னும் பட்டம் பெறுவதற்குமுன், கல்விக்கூடத்தில் பல வகுப்புகள் வாரியாக முன்னேறிச்செல்வதுபோல் பல பிறவிகள் மூலமான அதன் முன்னேற்றமாகும். பக்குவ மற்ற நிலையில் (மெய்ப்பொருளுடனான தமது தெய்வீக அடையாளத்தைப்பற்றி அறியாதிருத்தல்) உள்ள ஆன்மாக்கள் ஸ்தூல சரீரத்தின் மரணத்திற்குப்பின் தாமாகவே இறை அனுபூதி நிலைக்குச் செல்வதில்லை. நாம் இறைவனின் வடிவில் படைக்கப்பட்டிருக்கிறோம். ஆனால் ஸ்தூல சரீரத்துடன் நம்மை அடையாளப் படுத்திக் கொள்வதனால் அதனுடைய குறைகளை யும், வரையறைகளையும் நாம் ஏற்றுள்ளோம். இறப்பைப்பற்றிய இந்தக் குறைபாடுள்ள மனித உணர்வுநிலை அகற்றப்படாதவரை நாம் மீண்டும் தெய்வங்களாக முடியாது.

ஓர் இளவரசன் தன்னுடைய அரண்மனை இல்லத்திலிருந்து ஓடிவிட்டு ஒரு சேரியில் தஞ்சம் புகுந்தான். குடிபோதையினாலும் தீய நடத்தை உள்ளவர்களின் சகவாசத்தாலும் காலப் போக்கில் தனது உண்மையான அடையாளத்தை மறந்துவிட்டான். அவனுடைய தந்தை அவனைக் கண்டு சொந்த வீடான அரண்மனைக்குக் கூட்டிச் செல்லும் வரை, தான் உண்மையில் ஓர் இளவரசன் என்பது அவனுக்கு நினைவு இல்லை.

இதைப்போலவே நாம் அனைவரும் தமது ஆன்மீக இல்லத்திலிருந்து ஓடி வந்துவிட்ட அண்ட சராசர அரசனின் குழந்தைகளாவோம். நாம் நமது தெய்வீக மரபுரிமையை மறந்துவிடும் அளவிற்கு நம்மை மானிட சரீரங்களுக்குள் வெகுகாலமாக பூட்டிவைத்துள்ளோம்.

நாம் பூமிக்கு எத்தனை முறை வந்துள்ளோமோ, அத்தனை தடவையும் புதிய குறைபாடுகளையும் புதிய ஆசைகளையும் வளர்த்துவந்துள்ளோம். எனவே, எல்லா ஆசைகளையும் நாம் நிறைவேற்றிக்கொள்ளும் வரையிலும் அல்லது விவேகத்தின் வளர்ச்சி மூலம் நாம் அந்த ஆசைகளை அகற்றும்வரையிலும் நாம் மீண்டும் மீண்டும் இங்கு திரும்பி வருகிறோம். நமது ஆசைகளை திருப்திபடுத்தவேண்டும் அல்லது விவேகத்தை வளர்த்துக்கொள்வதன் மூலம் அவைகளை முழுவதுமாக அகற்றவேண்டும். எனினும், தமது ஆசைகளை திருப்தி செய்ய முயல்வதன் மூலம், பிறப்பு இறப்பு எனும் சக்கரத்திலிருந்து விடுபடுபவர்கள் மிகச் சிலரே. ஆசையின் இயல்பானது, ஒருவர் அதை 'திருப்தி' செய்யும் ஒவ்வொரு முறையும் அவரது



மனம் மிக வலிமையாக இருந்தா லொழிய அந்த அனுபவத்தைத் திரும்பவும் பெறவேண்டுமென்ற பேரவா, தனது பிடியை மிகவும் அதிகரிக்கிறது. (இறைவனுடன் இணைந்துவிட்ட யோகி கர்மத்தின் பலன்கள் மீதான பற்றினை துறந்து அசைக்கமுடியாத (தற்கட்டுப்பாட்டால்) விளைந்த அமைதியில் அமைதியைப் பெறுகிறான்.

இறைவனுடன் ஒன்றிணையாத மானிடன் ஆசைகளினால் ஆளப்படுகிறான். அவன் செய்கின்ற கர்மங்களினாலும் கர்ம பலன்களினாலும் கட்டப்பட்டு தத்தளிக்கிறான். பலவிதத்திலுள்ள ஆசைகளும் அபிமானமும்தான் மீண்டும் கர்மங்களை செய்வதற்கு தூண்டுகின்றன. அதனால் ஆசைகளும் அபிமானமுமாகின்ற வலைகளில் சிக்குகின்றன. யோகி ஆத்ம சுத்திக்காக கர்மம் செய்கிறான் என்றால் அஞ்ஞானி (யோகியல்லாதவன்) தன் ஆசைகளை நிறைவேற்றுவதற்காகவே கர்மம் செய்கிறான். இவ்வகையான பந்தத்தினால் அவன் அடிமைத்தனத்தால் நீடிக்கிறான். (பகவத்கீதை அத்.5 ஸ்லோகம்12)

சிறிய அல்லது முக்கியமற்ற ஆசைகளை பூர்த்திசெய்வது மேலானது; ஏனென்றால் அந்த முறையில் நாம் அவற்றிலிருந்து விடுபட முடியும். ஆனால் அறிவோடும் விவேகத்தோடும் நாம் அவ்வாறு செய்வது அவசியம்; இல்லையென்றால் சிறிய ஆசைகள்கூட, அனுபவத்தின் வாயிலாக பலப்படுத்தப்பட்டு, மீண்டும் ஒரு வலிமையான முறையில் வந்துசேரும். உதாரணமாக குடிப்பதற்கான ஆசையுள்ளவர்கள், அடிக்கடி இவ்வாறு நியாயப்படுத்துகிறார்கள். "நான் விரும்பும் அனைத்தையும் இன்று குடிப்பேன், நாளை அவை இல்லாமல் இருப்பேன்." இந்த அனுபவத்தை அநேக முறைகள் திரும்பத் திரும்ப பெற்ற பின்னர் வழக்கமான விளைவு என்னவென்றால், அவர்கள் ஒரு பழக்கத்தை ஏற்படுத்தி விட்டதையும், மேலும் அதிலிருந்து விடுபடுவது கடினம் என்பதையும் அவர்கள் காண்கின்றனர். இதே மாதிரியாக மற்ற எந்த ஆசையுடனும் நிகழலாம்.

இறைவன், நம்மை இங்கே அனுப்பி நாம் என்ன செய்யவேண்டும் என்பதை நமக்கு கூறிக்கொண்டிருக்கும் ஒரு சர்வாதிகாரியல்ல. நாம் விரும்புவதைச் செய்வதற்கு நமக்கு சுதந்திரத்தைத் தந்துள்ளான். நல்லவர்களாக இருக்கவேண்டியதின் முக்கியத்துவத்தைப் பற்றி நாம் பெருமளவு கேள்விப்படுகிறோம். ஆனால் நாம் எல்லோரும் இறக்கும்பொழுது நேராக சுவர்க்கத்திற்குச் செல்வோம் என்றால் (சிலர் உரிமை கொண்டாடுவது போல்) நாம் இங்கு இருக்கும்போது நன்மை செய்ய முயல்வதில் என்ன பயன்? வாழ்வின் முடிவில் அனைவருக்கும் ஒரே சன்மானம் என்றால், தீய வழியை பின்பற்றுவது பெரும்பாலும் மிகச்சுலபம் என்பதால், ஏன் பேராசை மற்றும் சுயநலப்பெருவழியாக இருக்கக்கூடாது?

இறக்கும்பொழுது நாம் அனைவரும் நல்லவர்கள் மற்றும் தீயவர்கள்ஒரே மாதிரியான தேவதைகளாக ஆவோமானல், பெரிய மகான்களின் வாழ்க்கைகளைப் பின்பற்றுவதில் எந்தப் பயனும் இருக்காது.

மாறாக இறைவன் அவனது திட்டத்தில் நாம் அனைவரும் நரகத்திற்குச் செல்லவேண்டும் என்று வைத்திருந்தால், இந்த வாழ்க்கையில் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்பதைப் பற்றி கவலைப்படுவதில் எந்தப் பயனும் இருக்காது. நமது வாழ்க்கை மோட்டார் வாகனங்களைப்போல அவைகள் பழமையானவுடன் குப்பைமேட்டில் வீசப்பட்டு, அதுவே அவைகளின் முடிவாவது போல இருக்குமென்றால், ஒருவரது செயல்களை கவனித்து வருவதில் ஏதாவது மதிப்பு இருக்குமா? மனித வாழ்க்கை இவ்வளவுதான் என்றால், சாத்திரங்களைப் படிப்பதிலோ அல்லது சுயகட்டுப்பாட்டைப் பயிற்சி செய்வதிலோ எந்தப் பொருளும் இல்லை."

இது சம்பந்தமாக எனது கருத்தைக் கூற விழைகின்றேன். என்னுடைய பத்து வயதிலிருந்து பிறப்பு இறப்பு இவற்றைப் பற்றி சிந்தித்ததுண்டு. அதை ஆழமாக சிந்தித்ததில்லை. ஆனால் எனக்கு இறைவனை

38 பாகம்
பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்
மனித வாழ்வு மேம்படுவதற்காக

மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
“ஆன்மிகமலர் மெயில் புத்தகம்”
aanmeegamalar.com
இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு
செய்தும் படிக்கலாம்

இப்பிறவியிலேயே காணவேண்டும் என்ற பேராவலும் தாகமும் இருந்து வந்தது. அது என்னுடைய இல்லறவாழ்வு ஆரம்பித்தபின்பு சிறிது காலம், அதாவது சுமார் பத்து ஆண்டுகளுக்குப்பின் அந்த எண்ணம் என்னிடமிருந்து மறைந்துவிட்டது. அதன் பின்னர் அந்த எண்ணம் மீண்டும் முளைக்க ஆரம்பித்துவிட்டன. என்னுடைய கர்மாதான் என்னுடைய இல்லற வாழ்க்கைக்குக் காரணம் என்பதை நான் புரிந்துகொண்டேன். அதன் பின்னர் (இறை நினைவுகள்) வளர ஆரம்பித்தது.

சரி, அது போகட்டும்; நாம் எதற்காகப் பிறப்பெடுத்து பூமிக்கு வந்துள்ளோம் என்பதை உணரவேண்டும். ஒரு பிறவியின் முக்கால் பங்கு முடிவடையும்போது சிலர் உணருவர். சிலர் பாதியிலேயே உணரத்தொடங்குவர். சிலர் தம் வாழ்க்கையையும் உணரமாட்டார்கள்; தம் தவறுகளையும் உணரமாட்டார்கள்.

தாம் சொல்வதுதான் சட்டம்; தாம் செய் வதுதான் நியாயம் என்று எண்ணி தம்மை பெருமைப் படுத்திக்கொள்வர். இவ்வாறு ஒவ்வொரு பிறவி (மனிதப்பிறவி) யின் இறுதிக் கட்டத்திற்கு முன்னரே அப்பிறவி பற்றிய கருத்தினை ஒவ்வொருவரும் அறிந்துணர்வது நன்று. ஏனென்றால், மனம், வாக்கு, செயல் இவற்றால் பிறருக்கு எத்தனை நன்மை செய்துள்ளோம்; எத்தனை தீமை செய்துள்ளோம் என்பதை ஆராய்ந்தறிந்து, செய்த தவறுகளுக்கு வருந்தி இறைவனிடத்தில் மன்னிப்பு கேட்டும் பின்னர் அதுபோன்ற தவறுகளைச் செய்யாதிருத்தலும்தான் ஒரு மனிதனின் கடமை. இவ்வாறு, எடுக்கின்ற பிறவிகளில் மனிதனானவன் தன் தவறுகளை உணர்ந்துகொண்டால் அடுத்துவரும் பிறவிகளில் முன்னேற்றமடைந்து இறைவனை அடைவதற்கான பிறவியெடுக்க வாய்ப்புகள் உள்ளன.

நாம் எத்தனை பிறவிகள் எடுத்தோம் என்னென்ன தவறுகள் செய்தோம் என்பது யாருக்கும் தெரியாது. அந்தந்த பிறவிகளில் செய்யும் தவறுகளை அந்தந்த பிறவியிலேயே உணர்வதே சாலச்சிறந்தது. உணர்வதற்கான வாய்ப்புக்குக் காரணம் தன்னுடைய மிகுந்த துன்பங்களே. அந்தத் துன்பங்கள் நோயினாலும் ஏற்படலாம்; வறுமையினாலும் ஏற்படலாம்; இம்மாதிரியான கொடுமைகளுக்கெல்லாம் காரணம் நாம் செய்த வினைகளே. அவற்றை நாமே உணர்ந்து, தீர்ப்பது நன்று. எல்லாத் துன்பங்களுக்கும் காரணம் நம் தீவினைகளே.

நன்மைகளைச் செய்ய அறிவுறுத்தி ஒளவையார் கூறிய அறிவுரைகள்:

நன்மை செய்தால் நன்மை வரும்
நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டா நின்று
தளரா வளர்தெங்கு நாளுண்ட நீரைத்
தலையாலே தாந்தருத லால்.

இதன் பொருள் என்னவென்றால், தென்னை மரம் வேரால் உண்ட நீரை இனிய சுவையுடைய இளநீராக்கி தலையாலே தருகின்றது. அதுபோல் நாம் பிறருக்குச் செய்யும் உதவி நமக்குத் தவறாமல் வந்து சேரும். ஆதலால் என்றும் நன்மையே செய்க!

நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார்சொற் கேட்பதுவும் நன்றே நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்று

நல்லவரைக் காண்பதும் அவர் சொற்களைக் கேட்பதும் நன்மையாகும்; அவருடைய நல்ல குணங்களைப் பேசுவதும் அவரோடு கூடியிருப்பதும் நல்லறிவையும் நல் லொழுக்கத்தையும் தரும்.

காலத்தில் அறஞ்செய்க
கொள்ளும் கொடுங்கூற்றம் கொல்வான்
குறுகுதன்முன்
உள்ளங்கனிந்தறஞ்செய் துய்கவே வெள்ளம்
வருவதற்கு முன்னர் அணை கோலி வையார்
பெருகுதற்கண் என்செய்வார் பேசு.

வெள்ளம் வருவதற்குமுன் அணைகட்டி வைக்காதவர் வெள்ளம் பெருகும்போது யாதும் செய்யமுடியாமல் துன்புறுவர். உயிர்களை தவறாமல் கொண்டு செல்லும் யமன் வருவதற்கு முன் மனங்கனிந்து அறஞ்செய்தல் வேண்டும்.

பெரியோர்க்குக் காப்பு வேண்டாம்
எல்லா திருப்ப இழிஞர்போற் றற்குரியர்
விள்ளா அறிஞரது வேண்டாரே தள்ளாக்
கரைகாப் புளதுநீர் கட்டுக்குள மன்றிக்
கரைகாப்புளதோ கடல்.

நீரைக்கட்டி வைக்கும் சிறிய குளத்திற்கே கரைகாப்பு வேண்டும்; பெரிய கடலுக்குக் கரைகாப்பு வேண்டுவதில்லை. அதுபோல, அறிவில்லாத சிறியோர் தம்மை பிறர் இகழாவண்ணம் காத்துக்கொள்ளவேண்டும். அறிஞர்க்குக் காப்பு வேண்டுவதில்லை.

பெரியோர் பழிக்கு அஞ்சுவர்
அறிவுடையா ரன்றி அதுபெறார் தம்பால்
செறிபழியை அஞ்சார் சிறிதும் பிறைநுதலால்
வண்ணம் செய் வாள்விழியே அன்றி
மறைகுருட்டுக்
கண்ணஞ்சு மோஇருளைக் கண்டு

அழகிய ஒளியுடைய கண்களே இருளுக்கு அஞ்சும். அதுபோன்று அறிவுடையோரே பழிக்கு அஞ்சுவர். குருட்டுக்கண் இருளைக் கண்டு அஞ்சுவதில்லை. அதுபோல அறிவிலியார் பழிக்கு அஞ்சுவதில்லை.

இவ்வாறு, பழிக்கு அஞ்சுவதும், அறஞ்செய்வதும் நல்லவர்களுடன் கூடி நல்லொழுக்கத்தைக் கற்று தன்னைக் காத்துக்கொள்வதும் தம்மை, பிறர் இகழாவண்ணம் காத்துக்கொள்வதும் எதற்காக? அறிவுடையோர் எதற்காக மேற்கண்டவாறு கூறியிருக்கின்றார்கள்.

அதை நாம் அனைவரும் சற்று யோசித்து நன்கு சிந்தித்து அவற்றின் பொருளை அறிந்து வாழ்வதே ஒரு மனிதனானவனின் கடமை. இந்தக் ‘கடமை’யை விளையாட்டாகவோ அல்லது விளையாடுவதற்காகவோ இறைவன் அருளவில்லை. ஒரு மனிதனின் குறிக்கோள் என்ன என்பதை பெரும்பாலானோர் உணர்வதில்லை.

ஒருவளுடைய வாழ்வில், துணையிருக்கிறேன் என்று கூறி, கைபிடித்த தன் மனைவியை விட்டுச் சென்ற கணவனையும், திருமணமே ஆகாத ஒருவள் வயதான பின்னரும், தனக் குத் திருமணமாகவேயில்லையே என்று எண்ணியவாறு துயருடன் அவளைக் கைப்பிடிக்க வராமலிருக்கும் ஆடவரையும் நினைத்து பிறர்மேல் பழியைப் போட்டு வாடிக்கொண்டிருக்கும் பெண்களின் கதி என்ன? அவளுடைய குறிக்கோள் என்ன? அவர்களுக்கு ‘இறைவன் தான்’; ‘இறைவன் மட்டும் தான்’ குறிக்கோள் என்பது அந்த அப்பாவிப் பெண்களுக்குத் தெரியாமலிருக்கின்றதே! இதற்கு யாரை குறைகூற முடியும்? “இறைவா! நான் உன்னை வேண்டிக்கேட்டுக்கொள்கின்றேன்; அவர்களுக்கும் அந்த உன்னதமான; மகோன்னதமான இறைஅனுபூதியைப்பெறுவதற்கான குறிக்கோளைப்பற்றி உணர்த்துவாயாக! அவர்கள் சிறிதுசிறிதாக படுகுழியில், பள்ளத்தாக்கில் இறங்கிக்கொண்டிருப்பதை என்னால் பார்க்கமுடியவில்லை.

கருணைகூர்ந்து பிரபஞ்சத்தந்தையான நீ அவர்களுக்கு அருள்வாயாக! ’பிறவிப் பெருங்கடலை நீந்தி இறைவனடி சேருவதே’ குறிக்கோள் என்பதை, அறியாதோர்க்கு அறிவிப்பாய் இறைவா!” அதற்காகத்தான் மீண்டும் பிறப்பெடுத்து பூமிக்கு வராமலிருப்பதற்கு பூஜ்ய குருதேவரின் போதனைகளை பின்பற்றி, ஆனந்த நீரூற்றான இறை அனுபூதியை பெறவாருங்கள் என்று அன்புடன் அழைக்கிறேன்!!

மீண்டும் மலரும்...

குருப்ரியா Cell No.9894595909

ஆன்மிகம் தத்துவம் உடல்நலம் பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

www.aanmeegamalar.com









www.aanmeegamalar.com

# வஸ்திர தானமும் அதன் சிறப்புகளும்



நமக்கு வேதத்தில் வஸ்திரத்தை குறித்து மிகவும் விசேஷமாக கூறப்பட்டுள்ளது. கரையில்லாத வஸ்திரத்தை அணியக்கூடாது. கரையுள்ள வஸ்திரத்தை மட்டுமே அணிய வேண்டும். ஸ்நானம் செய்து முடித்தவுடன் நாம் கட்டியிருக்கும் வஸ்திரத்தை கீழே போட்ட பிறகு அதை கால்களால் எடுக்கவோ மிதிக்கவோ கூடாது.

ஏனென்றால் தேவதைகள் அனைவரும் வஸ்திரத்தில் குடியிருப்பார்கள். வேதத்தில் வஸ்திரத்தை செய்யும் முறை, வஸ்திரத்தில் தேவதைகள் எப்படி குடி புகுவார்கள் என்பதை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. அதனால் தான் வஸ்திரதம் மிகவும் மகத்தானது. கரையுள்ள வஸ்திரத்தை யாருக்கேனும் அளித்தால் அவர்கள் பல தலைமுறைகள் நீடூடி வாழ வேண்டும் என்று நாம் நினைப்பதற்கு சமம். அதே போல் யார் கொடுத்தாரோ அவரும் பல தலைமுறைகள் நீடூடி வாழ வேண்டும் என்று ஸங்கல்பம் ஆகும். இதனால் தான் வஸ்திரத்தை தரும் பொழுது கரையில்லா வஸ்திரத்தை தரமாட்டார்கள். கரையுள்ளவையே தருவார்கள்.



“சர்வம் சிவமயம் ஜகத்” (நெசவு) துணி நெய்யும் நெசவுக் கலையின் மூலமாகவும்; நெசவாளிகள் மூலமாகவும் நாம் பல தத்துவ விஷயங்களை தெரிந்து கொள்ள முடியும். ஆணிலும் பெண்மை உண்டு; பெண்ணிலும் ஆண்மை உண்டு. முன்பே அதனை கூறி யது அறிவியல் அல்ல. அறிவியலுக்கு முன்பே நமது முன்னோர் கூறிவிட்டனர்.



இதை உணர்த்தும் விதமாகத்தான் (அர்த்த நாரீஸ்வரர் வடிவம்) வேட் டியோ புடவையோ; அவை இ ர ண் டு க் கு ே ம குறுக்கு நெடுக்கில்; குட்டையான குறுக்கிழையும் உண்டு.நீண்ட நெடுக்கிழையும் உண்டு. இதனை நேரிழை என்பர். நேரிழை என்றால் பெண் என்று பொருள்.

(நேச மும் வைத்தனையோ நேரி ழையாய் நேரிழையீர்சீ இவையும் சிலவோ விளை யாடி–மாணிக்க வாசகர். திருவெம்பாவையில்)

ஆடையில் ஓடும் நீண்ட நூலிழை பெண்.அதில் குறுக்கே ஓடும் குட்டை நூலிழை ஆண்.(உலகியல் வாழ்வில் பெண்ணே அதிக பங்கு வகிப்பவள் என்பதை இது காட்டுகிறது. அதனால்தான் இல்லற வாழ்வில் அனைத்து செயல்களிலும் பெண்ணுக்கே முன்னுரிமை தருகிறார்கள்.

அப்படியானால். ஆணையும் பெண்ணையும் சேர்த்து நெசவு நெய்ததுதான் இல்லற வாழ்க்கையா?ஆமாம் அதுதான் உண்மை!. அதை கூறுவதே இந்த வேஷ்டி புடவை முதலான ஆடைகள். அதனால்தான் விழாக்களில் ஒருவருக்கொருவர் வேட்டி வைத்து தருவது. புடவை வைத்து தருவது. குறைந்த பட்சம் ஓர் ரவிக்கை பிட்டாவது வைத்து தருவது எல்லாம் வந்தது)

ஆம் உலகில் நெருக்கமாய் பின்னிப்பிணைந்த முதல் இண்டர் நெட் வலைத்தள சேவையே இந்த புடவை வேட்டிதான். அதனால்தான் பூர்வ அபர கிரியைகள் எல்லாவற்றிலுமே இந்த துணி என்ற பொருளுக்கு மட்டும் முக்கியத்துவம் மிக அதிகமாய் உள்ளது. தானங்களில் வஸ்த்ர தானமும் இதன் அடிப்படையில்தான் முன்னோர்கள் வகுத்தனர்.

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033




ஆசிரியர், வெளியீட்டாளர்
C.நாகராஜன்
செல்: 8825844033
♦♦♦
இணை ஆசிரியர்
முருகன் செல்: 7338881773
♦♦♦
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர், சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா செல்: 9894595909
மூ.சக்திவேல் செல்: 9787576858
புனிதவேல் செல்: 9841807572
♦♦♦
வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 08825844033

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
08825844033

ஆசிரியர் குழுவில்
நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
8825844033



# கடவுள் உணர்வை மட்டும் கொள்ள முயல வேண்டும்

இந்தக் கடிதம் சமயம் என்ற மதத்தைப் பற்றியது அல்ல. கடவுளைப் பற்றியது. கடவுள் உணர்வைப் பெறுவதற்கே மனிதன் கடவுள் பக்தி செய்கிறான். உலகில் எங்கு இருக்கின்ற மனிதன் ஆனாலும் கடவுள் பக்திக்கே அவன் வாழுகிறான். “இதயம் அதற்கே துடிக்கும். எவரும் மத பக்தி செய்வதில்லை. உலகிலும் நமது நாட்டிலும் உள்ள மனிதர்கள் மத பக்தி செய்தால் ஒவ்வொரு தனி மனித னுக்கும் அது லாபமே இல்லை.

நான் ஒரு இந்து. நான் ஒரு கிறிஸ்துவன். நான் ஒரு முஸ்லீம். நான் ஒரு சீக்கியன். பௌத்தன். ஜைனன்..என்று சொல்லுவதற்கு இதுவரை என்ன லாபம் இருந்தது அல்லது உங்களுக்கு என்ன லாபம் கிடைத்தது? ஒன்றுமே கிடைக்கவில்லை.

அரசாங்கத்தில் உத்தியோகம் பெறுவதற்கும், கலாசாலைகளில் படிப்பதற்கு இடம் கிடைப்பதற்கும், தேர்தல் காலத்தில் வேட்பு மனுக் களில் தான் யார்.. என்பதை சொல்லுவதற்கு மட்டுமே உபயோகப்பட்டு வருகிறது. இக்கருத்தைப் படிக்கும் பக்தர்கள் இனியேனும் கடவுள் உணர்வை மட்டும் கொள்ள முயல வேண்டும்.

நாட்டில் மதத்தை மட்டும் பிரச்சாரம் செய்பவர்களின் பேச்சையும், அரசியல்வாதிகள், சாதாரண மக்கள், தெளிவைத்தர பாடுபடாத சிறிய பெரிய பத்திரிகைகளின் பேச்சையும் கேட்கவே கூடாது. உண்மைக்குப் பாடுபடும் மகான்களைத் தவிர மற்ற அனைவர்களின் செயல்களும் மக்களுக்கு புதைகுழி தோண் டும் வித்தகம்.. என்னும் மெத்தன வேலையே..என்பதை உணருங்கள்.

மேலே சொன்ன கருத்துப் படி பக்திக்கு கடவுளை உபயோகப்படுத்திக் கொள்ளாத இந்த நாட்டு மக்களும், உலக மக்களும் பக்தி மார்க்கத்தில் எங்கே இருக்கிறார்கள் தெரியுமா?

படிக்க ஆரம்பிக்கும் குழந்தைகளுக்கு எல்.கே.ஜி., யு.கே.ஜி., வகுப்புகள் உண்டு. இந்த வகுப்புகளில் இங்கு குழந்தைகளுக்கு மிகச் சிறிய அளவில் படிப்பு, அதிக அளவில் விளை யாட்டு, சிறிது தூக்கம்.. இவைகளே கற்பிக்கப் படுகின்றன. இந்த அளவிலாவது பக்தக்ர்களுக்கு கோயில், குளம், பூஜை, வழிபாடு, ஜெபம்.. இவைகள் இருக்கின்றனவா? என்று கேட்டால், இல்லை என்றே தெரிகின்றது. மறுபடியும் சிந்தி யுங்கள் பக்தர்களே!



சிறு பிள்ளைகளுக்கு எல்.கே.ஜி வகுப்புகளுக்கு ‘க்ரெச்’ என்ற வகுப்பு இருக்கிறது. இன்று நாட்டில் கணவனும் வேலைக்குச் செல்கிறான். மனைவியும் வேலைக்குச் செல்கிறாள். அவர்களுக்குப் பிறந்த குழந்தையை கவனித்துக் கொள்ள எவருமே இருப்பதில்லை.

அந்த சமயத்தில் பெற்றோர்கள் மூன்று வயது, நான்கு வயது ஆன குழந்தைகளை பள்ளிக்கூடத்தில் சேர்த்து ‘க்ரெச்’ வகுப்பில் போட்டுவிடுகிறார்கள். இங்கு தாதிமார்கள் என்னும் ஸ்கூல் ஆயாக்கள் க்ரெச் குழந்தை களுக்கு புட்டிப்பால் ஊட்டி தூங் கச் செய்து, பொம்மயைக் காட்டி விளையாட வைத்து, மலம், மூத்திரம்..துடைத்து மாலையில் வீட்டுக்கு அனுப்புகிறார்கள்.

பக்தி மார்க்கத்தில் உள்ள பள்ளிக்கூடத்தில் நாட்டு மக்கள் இன்று இந்த க்ரெச் நிலையில் வாழுகிறார்கள் என்பது உண்மை. வெட்கித் தலை குனிய வேண்டிய பக்தர்களே! இனியாவது மேலே செல்லுங்கள். இனியாவது கடவுளை எண்ணி கடவுளைப் பற்றி மட்டுமே பேசுங்கள். இதன் பின் மனம் மாறாமல் நீ இருந்தால் உன்னை நீ இந்த என்று அழைத்துக் கொண்டால், மற்றபடி எப்படிச் சொன்னாலும் என்ன லாபம்? லாபம் ஒன்றுமில்லை. நஷ்டமே..

உலகில் இந்து சமயம் ஒன்றே கடவுளுக்கு உருவம் உண்டு என்று சொல்லி உரு வழிபாட்டை மக்களிடம் வைத்துள்ளது. இது உண்மையே என்றாலும் உண்மையா..என்பதைப் பிறகு ஆராய்வோம்.

சகுணப் பிரும்மம் என்ற உருவ வழிபாட்டை வடமொழிப் புத்தகங்களும் தமிழ் நூல்களும் கடவுளின் அங்க முகங்களையே வருணித்து பெருமைப்பட துதித்து வருகின்றன. இதன் பொருள் என்ன தெரியுமா? உலகெங்கிலும் உள்ள பக்தர்கள் இன்னமும் பக்தி துறையில் எல்.கே.ஜி. வகுப்பில் கூட இல்லை. க்ரெச் வகுப்பில் உள்ள குழந்தையைப் போன்றே இருக்கின்றனர்.

இந்த நிலையை எண்ணி பக்தி மார்க்கத்தில் விரைவில் நுழையுங்கள். சாத்திரத்தை மட்டும் உணர்வது, தருமங்களை மட்டும் கேட்பது பள்ளிக்கூடத்தில் சிறிய குழந்தைகள் பெய்யும் மலஜலங்களைத் துடைப்பதற்கு ஒப்பாகும். அங்கு குழந்தைகள் தூங்குகின்ற உதாரணம் இன்று பக்தன் உணர முடியாமல் செய்யும் பூஜை வழிபாடுகளுக்கு சமமமாகும்.. உருவ விக்கிரங்களைப் பார்த்து பக்தி செய்யக் கஷ்டப்படுவது, ‘க்ரெச்’ வகுப்பில் நடத்தும் விளையாட்டுக்களே.

சீக்கிரம் முன்னேறு. இப்படி இருந்தால் என்ன செய்வது?

## ஞானிகளின் பொன்மொழிகள்...

1. பூரணத்துவம் என்பது சிறிய விஷயமல்ல. ஆனால் சிறு விஷயங்கள் எல்லாம் சேர்ந்து தான் பூரணத்துவமாகின்றன.
2. நாம் புண்ணியம் செய்திருந்தால் தான் நாம் சொல்வதை மற்றவர்கள் கேட்பார்கள்.
3. மரணத்தைப் பற்றி யாருக்கு நினைவு வருகிறதோ அவன் தான் இன்றே கடவுளை நினைப்பான்.
4. எவன் தன்னை ஏமாற்றிக் கொண்டு பிரம்மாண்டத்தின் உண்மைப் போக்கை அறிவதில் ஈடுபடுகிறானோ, அப்படிப்பட்ட தத்துவ ஞானியைவிட பரமாத்மாவின் தொண்டை செய்து கொண்டிருக்கும் இல்லறத்தான் நூறாயிரம் மடங்கு சிறந்தவன்.
5. கடவுள் தெரிய வேண்டுமென்றால் பக்தி செய்ய வேண்டும். கடவுளைப் பற்றி தெரிய வேண்டுமென்றால் சாஸ்திரத்திற்கு அலைய வேண்டும்.
6. மனிதன் ஏற்படுத்திக் கொண்ட அசௌகரியங்கள் தான் சாஸ்திரம்.
7. சாஸ்திரத்தால் கடவுளைப் பார்ப்பவர்கள் உச்சிப்பொழுது சூரியனை பார்ப்பது போல், ஆனால் குருவின் மூலம் இறைவனை, அதிகாலை சூரியனை பார்ப்பது போல் தரிசிக்கலாம்.
8. முதலில் உயிர் நேய அனுபவம்; அடுத்து அருள் அனுபவம்; மூன்றாவது இறை அனுபவம் பெற வேண்டும்.
9. தானம், பச்சாதாபம், சந்தோஷம், அடக்கம், எளிமை, உண்மை, கருணை இவை ஏழும் வைகுண்டத்தின் வாயில்கள்.
10. அன்பின் முழுமையை யாரும் கண்டதில்லை. வளர்ச்சியைத்தான் பார்த்திருக்கிறோம்.

– ஞானச்சேரி ஞானிகள் –
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின் அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு எஸ்.மகாதேவன், போன் 098410 28028



# ஆத்தாவுக்கு சிறந்த ஆடி மாதத்தின் சிறப்புகள்

தமிழ் வருடத்தின் நான்காவது மாதம் ஆடி மாதம் ஆகும். ஒவ்வொரு ஆண்டும் இம்மாதம் முதலே விழாக்கள், உற்வசங்கள், பண்டிகைகள் ஆகியவை தொடங்கி அடுத்த ஆறு மாதங்களுக்கு நடைபெறுகின்றன.

ஆடிப்பெருக்கு, ஆடிச் செவ்வாய், ஆடி வெள்ளி, ஆடி அஷ்டமி, ஆடிக்கிருத்திகை, ஆடி சதுர்த்தி, ஆடிப்பஞ் சமி, ஆடி அமாவாசை, ஆடிப் பவுர்ணமி, ஆடித்தபசு, ஆடிப்பூரம் என ஆடி மாதம் முழுவதும் தெய்வங்கள் மற்றும் முன்னோர்கள் வழிபாடு செய்யப்படுகின்றனர்.

இம்மாதம் முழுவதும் பெண் தெய்வ வழிபாடே பெரும்பாலும் மேற்கொள்ளப்படுகின்றது.

ஆடி மாதம் என்பது கோடைகாலம் முடிந்து சிலுசிலு காற்றோடு சாரல் ஆரம்பிக்கும் பருவம்.

பொதுவாக இம்மாதத்தில் திருமணம் போன்ற தனி மனித விழாக்கள் நடத்தப்படுவதில்லை.

ஆடி மாதத்தில் நடைபெறும் விழாக்கள் பற்றிப் பார்க்கலாம்.

## தலை ஆடி

ஆடி மாதத்தின் முதல் நாள் தலை ஆடி என்று அழைக்கப்படுகின்றது. புதிதாக மணமான தம்பதியினர் மணப்பெண்ணின் தாய் வீட்டிற்கு அழைக்கப்படுவர்.

அங்கு மாப்பிள்ளைக்கு விருந்துடன் தேங்காய் பால் வழங்கப்படுகிறது. சில இடங்களில் தலை ஆடிக்கு மண மக்களுக்கு புது ஆடைகள் பரிசாக மணப் பெண்ணின் தாய் வீட்டிலிருந்து வழங்கப்படுகிறது.

பின் மணப் பெண் மட்டும் தாய் வீட்டில் தங்கிவிடுகிறாள்.

தாயிடம் இருந்து பொறுமை, அரவணைப்பு, விட்டுக் கொடுத்தல், சூழ்நிலையை சமாளித்தல் போன்றவற்றை திருமணமான பின்பு கற்றுக் கொள்கிறாள்.

மேலும் ஆடியில் கருவுற்றால் சித்திரையில் குழந்தை பிறக்கும். சித்திரை வெயில் குழந்தைக்கும், தாயுக்கும் உடல் மற்றும் மனரீதியாக அசௌகரியத்தைக் கொடுக் கும். எனவே தான் தலை ஆடிக்கு வரும் புது மணப்பெண் தாய் வீட்டில் ஆடி மாதம் முழுவதும் தங்கிவிடுகிறாள்.

இதனால் தான் ஆடிப்பால் குடிக்காத மாப்பிள்ளையைத் தேடிப்பிடி என்ற பழமொழி இன்றும் வழக்கத்தல் உள்ளது.

## ஆடிச்செவ்வாய்

ஆடி மாதத்தில் வரும் செவ்வாய்கிழமைகளில் அம்மன் வழிபாடு வீட்டிலும், கோவில்களிலும் மேற்கொள் ளப்படுகிறது.

ஆடிச்செவ்வாய் அன்று பெண்கள் ஔவையார் விரதம் மேற்கொள்கின்றனர். ஆடிச்செவ்வாய் இரவு ஊரில் உள்ள வயதில் மூத்த பெண்மணி தனது வீட்டில் மற்ற பெண்களுடன் இணைந்து பச்சரிசி மாவினைக் கொண்டு உப்பில்லா கொழுக்கட்டையை தயார் செய்து ஔவையாருக்குப் படைத்து தேங்காய் உடைத்து ஔவை யாரின் கதையை மற்ற பெண்களுக்கு கூறி வழிபாடு நடத்துவர். இவ்வழிபாட்டில் ஆண்கள் மற்றும் ஆண் குழந்தைகளுக்கு அனுமதி கிடையாது.

மேலும் பிரசாதக் கொழுக்கட்டைகளை பெண்கள் மற்றும் பெண்குழந்தைகள் மட்டுமே உண்பர்.

இவ்விரதத்தினை மேற்கொள்வதால் வளமை யான வாழ்வும், நீண்ட ஆயுளும், மாங்கல்ய பலனும் கிடைப்ப தாக கருதப்படுகிறது.

## ஆடி வெள்ளி

ஆடி மாதத்தில் வரும் வெள்ளிக்கிழமைகள் அம்மன் வழிபாட்டிற்கு உகந்ததாகக் கருதுகின்றனர்.

கோவில்களில் விளக்கு பூஜை என்ற கூட்டு வழிபாட்டினை பெண்கள் மேற்கொள்கின்றனர்.

ஆடிச்செவ்வாய் மற்றும் ஆடி வெள்ளிக் கிழமைகளில் ஆடிக் கூழ் ஊற்றப்படுகிறது. கேப்பை அல்லது கம்பு மாவினைக் கொண்டு கூழ் தயார் செய்யப்படுகிறது.

அதனுடன் சிறு வெங்காயம் சேர்த்து மக்களுக்கு வழங்கப்படுகிறது. ஆடி மாதத்தில் கோடை வெப்பம் முடிந்து காற்றோடு சாரல் மழை பெய்யும். இதனால் அம்மை நோய் பரவும். கேப்பை மற்றும் கம்பு தானியம் உடலுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை தரும். சின்ன வெங்காயம் அம்மை நோய் கிருமியை கட்டுப்படுத்தும்.

இதனாலே நம் முன்னோர்கள் கோவில்களில் கூழ் தயார் செய்து மக்களுக்கு பிரசாதமாக வழங்கி இருக் கின்றனர்.

இன்றளவும் இம்முறை கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

## ஆடிக்கார்த்திகை

ஆடிக்கார்த்திகை அன்று எல்லா முருகன் கோவில் களிலும் சிறப்பு வழிபாடு மேற் கொள்ளப்படுகிறது.

அன்று முருகனுக்கு சிறப்பு அபிசேகங்கள், ஆராத னைகள் செய்யப்படுகின்றன. ஆடிக்கார்த்திகைக்கு விரத முறை மேற்கொள் ளப்பட்டு முருகனை வளர்த்த கார்த்திகைப் பெண்கள் நினைவு கூறப்படுகின்றனர்.

## ஆடி அமாவாசை

ஆடி அமாவாசை அன்று முன்னோர்களுக்கு தர்பணம்

www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com

நீர் நிலைகளில் செய்யப்படுகிறது. அன்று பித்ருக்களுக்காக மக்கள் விரத முறையை மேற்கொள் கின்றனர்.

பித்ரு பூஜை வருடத்தில் ஆடி அமாவாசை, தை அமாவாசை அன்று பெரும்பான்மையான மக்களால் நடத்தப்படுகிறது.

வம்சம் தழைக்கவும், சுபிட்ச வாழ்வும் வேண்டி மக்கள் இவ்வழிபாட்டினை மேற்கொள்கின்றனர்.

இராமேஸ்வரம், பாபநாசம் போன்ற இடங்களில் பித்ரு பூஜை செய்வது சிறப்பு வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

ஆடி அமாவாசை அன்று தான் திருவையாற்றில் சிவபெருமான் திருநாவுக்கரசருக்கு கயிலைக் காட்சியளித்தார்.

இந்நிகழ்வை நினைவு கூறும் விதமாக இன்றும் இந்நிகழ்வு ஆடி அமாவாசை அன்று நிகழ்த்தப்படுகிறது.

## ஆடிப்பௌர்ணமி

ஆடிப்பௌர்ணமி அன்று குரு வழிபாடு மேற்கொள்ளப்படுகிறது.

இது குரு பூர்ணிமா என்றும் வழங்கப்படுகிறது. மாணவர்கள் தங்களுக்கு கல்வி கற்றுக் கொடுத்த குருவை (ஆசிரியர்) வழிபடுவதுடன் தட்சிணா மூர்த்தி, கிருஷ்ணன், வேதவியாசர், ஆதிசங்கரர், இராமானுஜர், போன்றோரையும் வழிபடுகின்றனர்.

ஹயக்கிரீவர் அவதார தினமும் இந்நாளே ஆகும். கல்விச் செல்வம் வேண்டி ஹயக்கிரீவர் வழிபாடும் ஆடிப்பௌர்ணமி அன்று மேற் கொள்ளப்படுகிறது.

திருநெல்வேலி மாவட்டம் சங்கரன் கோவி லில் ஆடிப் பௌர்ணமி அன்று ஆடித்தபசு நடைபெறுகிறது.

உமையம்மை கோமதி என்ற திருநாமத்துடன் சங்கர நாராயணர் தரிசனம் வேண்டி சிவனை நோக்கி ஒற்றைக் காலில் இத்தலத்தில் தவமிருந்தாள்.

கோமதி அம்மையின் வேண்டுகோளுக்கு இணங்க பொதிகை புன்னை வனத்தில் இறைவன் சங்கர நாராயணராக ஆடிப்பௌர்ணமியில் காட்சி அளித்தார். இந்நிகழ்ச்சியை நினைவு படுத்தும் விதமாக ஆடித் தபசு விழா இன்று கொண்டாடப்படுகிறது. 12 நாட்கள் நடைபெறும் இவ்விழாவில் 11ம் நாள் தபசுக் காட்சி நடைபெறுகிறது.

## ஆடி நவராத்திரி

இம்மாதத்தில்தான் வாராஹி அம்மனை நினைத்து ஆஷாட நவராத்திரி கொண்டாடப் படுகிறது.

## ஆடிப்பூரம்

ஆடிப்பூரத்தில் தான் திருநெல்வேலி காந்தி மதி அம்மனுக்கு வளைகாப்பு வைபவம் நடை பெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் அம்மனுக்கு பக்தர்களால் வழங்கப்பட்ட கண்ணாடி வளையல்களை கொண்டு அலங்காரம் செய்யப்படுகிறது.

3 நாட்கள் கழித்து பக்தர்களுக்கு கண்ணாடி வளையல்கள் விநியோகம் செய்யப்படுகிறது.

மற்றவர்களும் பயன்பெற அறிமுகப் படுத்துங்கள்....

அற்புதமான கருத்துக்களைக் கொண்டு வெளிவரும் நமது இதழை உங்களுக்கு தெரிந்த நண்பர்கள், உறவினர்களும் படித்து பயன்பெற, அவர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள்.

நமது இதழில் நிறை குறைகளை எங்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

உங்கள் கருத்துக்களை கீழ்காணும் தொலைபேசி எண் மற்றும் வாட்சப் எண் மற்றும் இ-மெயில் முகவரியிலும் தெரியப்படுத்தலாம்

whatsapp: 8825844033

aanmeegamalar@gmail.com

இவ்வளையல்களை அணிவதால் குழந்தைப் பேறு கிட்டும்: மாங்கல்ய பலம் கூடும் என்று கருதப்படுகிறது. ஆடிப்பூரத்தில் தான் பொறுமையின் வடிவமான பூமா தேவியின் அவதாரமாக ஆண்டாள் அவதரித்தார்.

ஸ்ரீவில்லிபுத்தூரில் வாழ்ந்து வந்த பெரியாழ்வாருக்கு குழந்தைப் பேறு இல்லை. இக்குறையை நீக்குமாறு அவர் தினமும் திருமாலை வேண்டினார்.

அக்குறையை நீக்கும் பொருட்டு கோவில் நந்தவனத்தில் நள வருட ஆடிப்பூர செவ்வாய் கிழமையில் துளசி செடிக்கு அடியில் பெண் குழந்தை ஒன்றைக் கண்டு எடுக்கும்படி திரு மால் அருளினார்.

அக்குழந்தைக்கு கோதை என்று பெயரிட்டு வளர்த்து வந்தார் பெரியாழ்வார். கோதை அரங்கனையே மணாளனாகக் கருதி வளர்ந்து வந்தாள். பெரியாழ்வார் வடபத்ரசாயி பெரு மாளுக்கு கட்டும் மாலையை தினமும் அவர் அறியாத வண்ணம் அணிந்து மீண்டும் எடுத்த இடத்தில் வைத்து வந்தாள் கோதை.

ஒருநாள் இச்செயலைக் கண்ட பெரியாழ்வார் அதிர்ச்சியுற்று கோதையைக் கடிந்து கொண்டு வேறு மாலையைத் தயார்செய்து பெருமாளுக்கு சூட்டினார்.

அன்று இரவு கனவில் தோன்றி பெருமாள், "உம்பெண் உணர்வால் மட்டுமல்ல மனதாலும் என்னை ஆண்டாள். எனவே எனக்கு அவள் சூட்டிய மாலையையே அணிவிப்பீர்" என்று கூறினார்.

இதனால் கோதை அன்று முதல் சூடிக் கொடுத்த சுடர்கொடி, ஆண்டாள் என்று வழங்கப்பட்டாள். ஆண்டாள் இயற்றிய திருப் பாவை, நாச்சியார் திருமொழி பாடல்கள் இன்றளவும் மக்களால் பாடப்படுகின்றன.

ஆண்டாளை மன உறுதியுடன் வணங்கி னால் நினைத்தது நிறைவேறும். தம்பதி ஒற்றுமை ஏற்படும் என்று கருதப் படுகிறது.

ஒவ்வொரு வருடம் ஆடிப்பூரத்தன்று ஸ்ரீவில்லிபுத்தூர் தேர்த் திருவிழா விமர்சையாக நடைபெறுகிறது.

## ஆடிப்பெருக்கு

ஆடிப்பெருக்கு என்பது விவசாயிகள் நதி அன்னையிடம் வேளாண்மை சிறக்க துணை செய்யுமாறு மேற்கொள்ளப்படும் வழிபாடாகும்.

இவ்விழா காவிரி நதிக்கரையோர மக்களால் விமர்சையாகக் கொண்டாடப்படுகிறது.

மேலும் ஆடிப் பெருக்கன்றே விதைகள் விதைக்கப்படுகின்றன. ஆடி மாதப் பருவநிலை விவசாயத்திற்கு உகந்தது.

எனவே தான் ஆடிப் பட்டம் தேடி விதை என்ற பழமொழி வழக்கத்தில் உள்ளது.

ஆடிப் பெருக்கன்று எந்த வித செயலைத் தொடங்கினாலும் அது சிறப்பாக வளரும் என்ற நம்பிக்கை மக்களிடம் நிலவுகிறது.

காவிரிக்கரையில் பெண்கள் அதிகாலையில் குளித்து கரையோரத்தில் வாழை இலை விரித்து கருகமணி, பழங்கள், வெற்றிலை, பாக்கு சித்ரான்னங்கள், காப்பரிசி, மஞ்சள் தடவிய நூல் ஆகியவற்றை படைத்து அகல் விளக்கேற்றி காவிரியை வணங்குகின்றனர்.

பின்னர் மஞ்சள் நூலை கழுத்தில்கட்டிக் கொள்கின்றனர். ஸ்ரீரங்கநாதரும் ஆடிப் பெருக்கன்று காவிரி யில் எழுந்தருளி காவிரிக்கு சீர்பொருட்களை வழங்குவார்.

ஆடிப்பெருக்கு ஒவ்வோர் ஆண்டில் ஆடி 18ல் கொண்டாடப்படுகிறது. ஆடி மாதத்தில் வளர்பிறை சதுர்த்தி நாகசதுர்த்தி என்றும், வளர்பிறை பஞ்சமி கருட பஞ்சமி என்றும் கொண்டாடப்படுகின்றன.

வளர்பிறை தசமி அன்று திக்வேதா விரதம் கடைப்பிடிக்கப்படுகிறது. திசை தெய்வங்களுக்கு அன்று வழிபாடு நடத்தப்படுகிறது.

ஆடி வளர்பிறை ஏகாதசி அன்று அன்னதானம் செய்தல், பசுவிற்கு அகத்திக்கீரை அளித்தல் போன்றவற்றால் தீவினைகள் நீங்குவதாகக் கருதப்படுகிறது. ஆடி வளர்பிறை துவாதசி அன்று விஷ்ணு வழிபாடு நடத்தப்படுகிறது.

இதனால் வாழ்வில் செல்வவளம் சிறக்கும் என்று கருதப்படுகிறது.

கிராமங்களில் கிராம எல்லையில் உள்ள காவல் தெய்வங்களுக்கு வழிபாடு நடத்தப்படுகிறது.

கருடாழ்வார், சுந்தரநாயனார், கலிய நாய னார், புகழ்சோழ மூர்த்தி நாயனார், ஆளவந்தார், புண்டரிகாவுர், கந்தாடை, தோழப்பர், பத்ரி நாராயண ஆழ்வார் போன்றோர் ஆடியிலே அவதரித்தவர்கள் ஆவர்.

சுருங்கச் சொல்லின் ஆடி மாதத்தில் தனி மனித விழாக்களைத் தவிர்த்து பண்டிகைகள் போன்ற பொது விழாக்கள் சிறப்பாக கொண்டாடப்படுகின்றன.

**மு.கிருஷ்ணமோகன்**

ஸ்ரீ காலபைரவி ஜோதிட நிலையம்

தொ.பே.எண்:

08526223399 / 09843096462

www.aanmeegamalar.com



www.aanmeegamalar.com

# பிரச்சனை தீர்க்கும் முருகப்பெருமான்

உங்கள் பிரச்சனைகள் எதுவாக இருந்தாலும் அந்த பிரச்சனைகள் உண்டான முருகனின் திரு உருவத்தை வழிபாடு செய்தால் எளிதில் உங்கள் பிரச்சனைகளில் இருந்து வெளிபடலாம்.

**ஞானசக்திதரர்:** இந்த முருகனை வழிபட்டால் நினைத்த காரியங்கள் வெற்றியுடன் முடியும். திருத்தணிகையில் எழுந்தருளியிருக்கும் மூலவர் திருவடிவம் ஹஞானசக்திதரர்' திருக் கோலமாகும்.

**கந்தசாமி:** இவரை வழிபட்டால் சகல காரி யங்களும் சித்தியாகும். பழனிமலை ஆண்டவர் திருவடிவம் இது.

**ஆறுமுக தேவசேனாபதி:** இவரை வழி பட்டால் மங்களகரமான வாழ்வு கிடைக்கும். சென்னிமலையாண்டவர் திருக்கோயிலில் கர்ப்பக்கிரக மாடம் ஒன்றில் இந்த திருவுருவம் உள்ளது.

**சுப்பிரமணியர்:** இவர் தன்னை வழிபடும் பக்தர்களின் வினைகளை நீக்கி ஆனந்தப் பேற்றினை அளிக்கக் கூடியவர். நாகை மாவட் டத்திலுள்ள திருவிடைகழி முருகன் கோயில் மூலவர் சுப்பிரமண்யர் ஆவார்.

**கஜவாகனர்:** இவரை வழிபட்டால் துன்பங் கள் விலகி ஓடும். திருமருகல், மேல்பாடி, சிதம்பரம் நடராஜர் கோயில் கீழைக் கோபுரம் ஆகிய இடங்களில் யானை மீதிருக்கும் இவரது திருவுருவம் உள்ளது.

**சரவணபவர்:** தன்னை வழிபடும் அடியவர் களுக்கு மங்கலம், ஒலி, கொடை, சாத்வீகம், வீரம் முதலிய குணங்களை அளிப்பவர். சென்னி மலை, திருப்போரூர் ஆகிய இடங்களில் இவரது திருவடிவம் இருக்கிறது.

**கார்த்திகேயர்:** இவரை வழிபட்டால்சகல சவுபாக்கியங்களும் வந்து சேரும்.கார்த் திகை நட்சத்திர நாட்களில் இவரை வழிபடு வது விஷேசமான பலன்களைத் தரும். கும்ப கோணத்தில் உள்ள கும்பேஸ்வரர் கோயிலிலும், தாராசுரம் ஐராவதீச்வரர் கோயிலிலும் கார்த்தி கேயர் திருவுருவம் உள்ளது.

**குமாரசாமி:** இவரை வழிபட்டால்

## ஆறுபடைவீட்டின் சிறப்பு

**திருப்பரங்குன்றம்** சூரபத்மனை போரில் வென்ற பின் இந்திரன் மகளான தெய்வானையை மணந்த திருத்தலமிது.

**திருச்செந்தூர்** அசுரன் சூரபத்மனோடு முருகன் போரிட்டு வென்று வெற்றி வாகைச் சூடிய திருத்தலமிது.

**பழநி** மாங்கனிக்காக தமையன் விநாயகரோடு போட்டியிட்டு தோற்ற கோபத்தில் தண்டாயுதபாணியாக நின்ற திருத்தலமிது.

**சுவாமிமலை** தன் தந்தை சிவனுக்கே பிரணவ மந்திரத்தை ஓதி தகப்பன்சுவாமியாக காட்சிதரும் திருத்தலமிது.

**திருத்தணி** சூரனை வதம் செய்தபின் சினம் தணிந்து, குறவர் மகள் வள்ளியை மணந்த திருத்தலமிது.

**பழமுதிர்சோலை** ஔவைக்கு பழம் உதிர்த்து, வள்ளி தெய்வானையோடு காட்சிதரும் திருத்தலமிது. வைகைப் பொன் மலை என்கிற செம்மறி கடாவை அடக்கிய தலம் அனுமனுக்கு அருள்புரிந்தது.


கஜவாகனர்


கந்தசாமி


பாலசுவாமி

www.aanmeegamalar.com


சுப்பிரமணியர்


சோமாஸ்கந்தர்


சிரவுபஞ்சபேதனர்

www.aanmeegamalar.com


சக்திதரர்


குமாரர்


கார்த்திகேயர்

www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com


ஸ்ரீதராகாரி


சுப்பிரமணியர்


ஸ்ரீதேவ சேனாதிபதி

ஆணவம் அடியோடு நீங்கும். நாகர்கோவில் அருகில் இருக்கும் குமாரகோவிலில் இவரது திருவடிவம் உண்டு. கங்கை கொண்ட சோழபுரத்தில் இவருக்குப் பஞ்ச லோக விக்கிரகம் இருக்கிறது.

**சண்முகர்:** இவரை வழிபட்டால் சிவசக்தியை வழிபட்ட பலன் கிடைக்கும். திருச்செந்தூரில் உள்ள முருகன் அருட்கோலம் சண்முகர் திருவடிவமாகும்.

**தாரகாரி:** ஹதாரகாசுரன்’ என்னும் அசுரனை அழித்ததால் முருகப்பெருமான் இத்திரு நாமத்தைப் பெற்றார். உலக மாயைகளில் இருந்து விடுபட வழிசெய்யும் திருக்கோலம் இது. விராலி மலையில் உள்ள முருகன் கோயிலில் தாரகாரி இருக்கிறார்.


சேனானி

**சேனானி:** இவரை வழிபட்டால் பகை அழியும். போட்டிகளில் வெற்றிகிடைக்கும். பொறாமை நீங்கும். தேவிகாபுரம் ஆலயத்தில் சேனானி திருவுருவம் இருக்கிறது.


வள்ளிகல்யாணசுந்தரர்


சிகிவாகனர்


சரவணபவர்

**பிரம்மசாஸ்தா:** இவரை வழிபட்டால் எல்லா வகைவித்தைகளிலும் தேர்ச்சி பெறலாம். சகலவித கலையறிவும் அதிகரிக்கும். கல்வியில் தேர்ச்சி கிட்டும். காஞ்சிபுரத்தில் உள்ள குமரக்கோட்டம் ஆனூர், பாக சாலை, சிறுவாபுரி ஆகிய இடங்களில் பிரம்மசாஸ்தா திருக்கோலம் உள்ளது.

**வள்ளிகல்யாணசுந்தரர்:** இவரை வழிபட்டால் திருமணத் தடைகள் விரைவில் அகலும், கன்னிப் பெண்களுக்குக் கல்யாண பாக்கியம் கிடைக்கும். திருப்போரூர் முருகன் கோயில் தூண் ஒன்றில் இவர் திருவுருவம் இருக்கிறது.

**பாலசுவாமி:** இவர், உடல் ஊனங்களையும், குறைகளையும் அகற்றும் தெய்வம். இவரை வழிபடுபவர்களுக்கு உடல் நலம் கிடைக்கும். திருச்செந்தூர், திருக்கண்டிர், ஆண்டாள் கும்பம் கோயில்களில் பாலசுவாமி திருவுருவம் இருக்கிறது.

**சிரவுபஞ்சபேதனர்:** இவரை வழிபட்டால் துன்பங்கள் விலகும். மனச்சஞ்சலம் அகலும். திருநெல்லிக்கா, திருக்குறங்குடி, திருநளி பள்ளி ஆகிய இடங்களில்இவரது திருவுருவம் உண்டு.

**சிகிவாகனர்:** மயில் மீது இருக்கும் முருகன் அருட்கோலம் இது. ஆலயம் பலவற்றில் அழகுற அமையும் திருவடிவம். தன்னை வழிபடுபவர்களுக்கு இன்பமான வாழ்வு அளிப்பவர்.

– மு.கிருஷ்ணமோகன்

தொ.பே.எண்: 08526223399

ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோவில்
சிறுவாபுரி
வள்ளி மணவாளப் பெருமானுக்கு
கல்யாண மஹோற்சவம்
12.8.2018 ஞாயிற்றுக் கிழமை



அண்ணாமலையார்
ஆன்மிக வழிபாட்டு குழு
சென்னை
9ம் ஆண்டு
திருமண பிரார்த்தனை நிறைவேற பங்கேற்று நல்ல மணவாழ்க்கை பெறுக!!!
அனைவரும் வருக! முருகன் அருள் பெறுக!
அனுமதி இலவசம்
9940625308 | 9944309651 | 9790957592
9841807572 | 9944309719

www.aanmeegamalar.com

# சித்தர்களின் சித்தாந்தம் விசாலமானது

இறைவனின் அன்பு என்பது ஒருவருக்கு மட்டும் சொந்தமானது அல்ல. அனைவருக்குமே சமமானது தனிப்பட்ட மனிதரின் விழிப்பு நிலையே அவனை நிறைவானத்தன்மையை நோக்கி அழைத்துச்செல்கிறது என்பது இதன் பொருளாகும். இந்திய சித்தர்களும், இந்த கருத்தை மையமாக வைத்தே செயல்படுகிறார்கள் எனலாம். அகல் விளக்கிலிருந்து வருகின்ற வெளிச்சம் கவிஞனுக்கும் சொந்தம் கரப்பான் பூச்சிக்கும் சொந்தம் என்பது சித்தர்களின் முடிவு. சுருக்கமாக சொன்னால் நிறை நிலையை ஒவ்வொரு மனிதனும் அடைய முடியும் என்று சித்தர்கள் கூறுகிறார்கள்.

இப்போது நமக்கொரு சந்தேகம் வருகிறது. நிறை நிலை என்றால் என்ன? கை இருக்கிறது கால் இருக்கிறது உழைத்து சேர்த்த சொத்து சுகமிருக்கிறது கட்டிய மனைவி, பெற்றபிள்ளை, உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவரும் இருக்கிறார்கள் எல்லோருக்கும் முடிந்ததை கொடுக்கிறோம். தேவையானதை கேட்டு பெறுகிறோம் பசி இல்லை, நோய் நொடியும் இல்லை நிறைவாகத்தானே வாழுகிறோம். அப்படி என்றால் சித்தர்கள் கூறுகிற நிறை நிலை என்பது இது தானோ? என்பது அந்த சந்தேகம். இந்த வாழ்க்கை மனிதர்கள் மட்டும் வாழுகிற வாழ்க்கை அல்ல. ஏன் எறும்பு, காக்கை, குருவி கூட இப்படி வாழுகிறது. சித்தர்கள் இந்த நிறைவை பற்றி பேசவில்லை. அவர்கள் பேசுவது வேறு நிறைவு. நல்ல வளமான ஆரோக்கியமான உடலை நிறைவு நிலை என்பார்கள். சிலர் கண்ணுக்கு தெரியாமல் வாழ்வது, காற்றிலே பறப்பது போன்ற சித்துக்களை கற்றுக்கொள்வது தான் நிறைவு என்பார்கள். சிலர் ஒழுக்கம் கெடாமல் உயர்ந்த வாழ்க்கையை கம்பீரமாக வாழ்வதே நிறைவு என்பார்கள். சிலர் கடல் பொங்கி எழுந்தாலும் கலங்கிடமாட்டோம் அண்டம் சிதறினாலும் அஞ்சிட மாட்டோம் என்று அஞ்சாமல் வாழ்வது நிறைவு என்பார்கள் சிலர்.

இந்தநிறைவுகள் எதுவுமே நிறைவுகள் அல்ல. உலகுக்கும், உயிர்களுக்கும் காரணமான மூலப்பரம்பொருளை கண்ணுக்கு தெரியாமல் கருத்தினுள் நிறைந்து நிற்கும் இறைவனை இறைவன் தன்மையை முழுமையாக உணர்ந்து நெஞ்சத்தில் நிறுத்தி ஒவ்வொரு வினாடியும் ஆனந்தத்தை அனுபவிப்பதுதே உண்மையான நிறைவு என்பது சித்தர்கள் மிக கடைசியாக உண்மையை சாரமாக்கி கூறும் செய்தியாகும். ஏதாவது ஒரு காலத்தில் மற்ற நிறைநிலைகள் அதாவது உடல் மனது ஆன்மா இவைகள் மூலம் பெறுகின்ற நிறை நிலைகள் கலங்கி நிற்கலாம். அழிந்தும் போகலாம். ஆனால் ஆண்டவனில் ஆனந்திக்கும் நிறைவு நிலை எப்போதுமே சாஸ்வதமாக நிலைத்து நிற்கும் என்பது சித்தர்களின் கருத்து இங்கே கூறப்படும் நிறைவு நிலை என்பதை



முக்தி என்ற தத்துவத்தோடு இணைத்து சிந்தித்தால் சித்தர்களின் சித்தாந்தம் எவ்வளவு விசாலமானது என்பது நமக்கு தெரியும்.

இந்த உலகத்தில் பல புரட்சிகள் நடந்திருக்கின்றன. மிகப்பெரிய தொழில் புரட்சி என்பது இங்கிலாந்து நாட்டில் நடந்தது ஒரு மிகப்பெரும் அலையானது புறப்பட்ட வேகத்தில் எதிரே இருக்கின்ற எல்லாவிதமான சரக்குகளையும் எப்படி புரட்டி போட்டுவிடுமோ அப்படி புரட்டி போட்டது தொழில் புரட்சி. தொழில் புரட்சியால் ஏற்பட்ட முதலாளி தொழிலாளி என்ற வர்க்க பேதங்களால் வெடித்து உருவானது தான் காரல்மார்க்ஸ் கண்ட பொதுவுடைமை புரட்சி. இந்த இரண்டு புரட்சிகளின் விளைவாகவே பத்தொன்பதாம் நூற்றாண்டும் இருபதாம் நூற்றாண்டும் உலகம் அலைகழிக்கப்பட்டது எனலாம். இன்று அந்த புரட்சி அலைகள் ஓய்ந்து விட்டன. இன்னும் தெளிவாக சொல்லப்போனால் அந்த அலை வீசியதற்கான சிறிய சுவடுகள் தான் நம் கண்ணெதிரே இன்று தென்படுகிறது. மாபெரும் புரட்சிகளான இவைகள் மறைந்து போனதற்கு என்ன காரணம்?

கேள்வி பெரியதாக இருந்தாலும் இதற்கான பதில் மிக சுலபமானது எளிமையானது. நாம் காலிலே போடுகின்ற காலணிகளை பத்தாயிரம் ரூபாய் கொடுத்து வாங்கினாலும் அதை ஒரு வருடத்திற்கு மேல் உபயோகிக்க முடியாது. தேய்ந்து அறுந்து பழையதாக போய்விடும். ஆனால் அறுபது ஆண்டுகள் ஆனாலும் அதற்குமேல் காலம் போனாலும் நமது பாதங்கள் தேய்வதில்லை பழுதாகி போவதில்லை பழையதாக துருப்பிடிப்பதும் இல்லை. காரணம் பாதங்கள் என்பது இறைவன் தந்த சொத்து பாத அணிகள் என்பது நமது கண்டுபிடிப்பு. மேற்கண்ட புரட்சிகளும் மனித கண்டுபிடிப்புகளே ஆகும். இந்த புரட்சிகள் சில சட்டங்களாலும் திட்டங்களாலும் மனிதனையும் நாட்டையும் மாற்றிவிடலாம் என்று குழந்தைத்தனமாக கற்பனை செய்கிறது. மனிதன் என்பவன் மனத்தால் மாறாத வரை எந்த மாற்றமும் ஏற்படாது என்பதை புரட்சிக்காரர்கள் ஏற்றுக்கொள்வதில்லை அதனால் அவர்கள் தோற்றுப்போனார்கள்.




மனித சமூகம் மாறவேண்டுமானால் மனிதன் மாறவேண்டும். மனிதனின் மனம் மாறவேண்டும் அப்போது மட்டுமே நடக்கும் பாதைகள் ஒவ்வொன்றும் தர்மத்தின் பாதையாக இருக்கும் தர்மவழியில் நடப்பவனால் மட்டுமே இறைவனை உணர முடியும். அதனால் தான் சித்தர்கள் மூடப்பழக்கவழக்கங்களை இன்னதென்று சுட்டிக்காட்டி தடுத்து நிறுத்தினார்கள் கடவுள் என்றால் யார்? என்று மிக கடினமான வார்த்தைகளால் சத்தமிட்டு சொன்னார்கள் அவரை அடைவதற்கு தடைகளாக இருந்த காமத்தை, மோகத்தை, குரூரத்தை வெறுத்து ஒதுக்குங்கள் என்று கட்டளை போட்டார்கள். நாம் கட்டளைகளை மட்டும் பிடித்து கொண்டு சித்தர்களை பார்த்தால் ஆழ்ந்த தத்துவத்தை உணராதவர்களாகவே போய்விடுவோம். சித்தர்கள் இறுதி முடிவாக கூறும் முக்தி நிலையின் முதல்படியை கூட நம்மால் தீண்ட முடியாது.

முக்தி முக்தி என்று மீண்டும் மீண்டும் சொல்லப்படுவதை கேட்கிறோம். இந்த வார்த்தைக்கு அர்த்தம் என்ன? எல்லாம் அறிந்த சித்தர்கள் மனிதரின் இறுதி லட்சியம் முக்தி என்று கூறுவதற்கு காரணம் என்ன? என்று நமக்கு தோன்றும் நமது இந்திய ஞானிகளும், சித்தர்களும் இரண்டுவிதமான முக்திகளை காட்டுகிறார்கள். ஒன்று நீர், நெருப்பு, நிலம், காற்று, ஆகாயம் என்ற ஐந்து பூதங்களின் கலவையால் உருவான இந்த உடலை விட்டுவிடாமல் இதிலேயே தங்கி கொண்டு அடைகின்ற ஜீவன் முக்தி மற்றொன்று கூண்டுக்குள் அடைபட்டு கிடக்கின்ற பறவை விடுதலை பெற்று சிறகடித்து பறப்பதை போல உடல் என்ற கூண்டை உடைத்து ஜீவன் பறவை அடைகின்ற விதேக முக்தி அதாவது உடல் இருக்கும் போது இறை அனுபவத்தை பெற்றால் அது ஜீவன் முக்தி இல்லாத போது பெற்றால் அது விதேக முக்தி இந்த இரண்டுவகை முக்திகளே ஒவ்வொரு ஜீவனும் பெறவேண்டும் என்று சித்தர்கள் விரும்புகிறார்கள்.

முக்தி நிலையை பற்றி பேசாத பெரியவர்கள் இல்லை. இந்தியாவில் முக்திக்கு கொடுக்கப்படுகின்ற விளக்கங்களை எல்லாம் ஒன்று சேர்த்து திரட்டினால் அது இமய மலையை விட பெரியதாக இருக்கும். இந்திய பெருங்கடலை விட ஆழமாக இருக்கும். அதிலும் குறிப்பாக சித்தர்கள் முக்திக்கு கூறி இருக்கின்ற விளக்கங்கள் பொருள் பொதிந்ததாகும்.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 9442426434

மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
"ஆன்மிகமலர் மெயில் புத்தகம்"
பெற உங்கள் இமெயில் முகவரியை
கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி
வையுங்கள்
whats-app no: 7299992699
aanmeegamalar@gmail.com

# குளிக்கும்போது கவனிக்க...

குளிக்கும் போது வடக்கு அல்லது கிழக்கு திசை நோக்கி நின்று குளிக்கவேண்டும். (இவை இரண்டும் உத்தம திசைகள்.

(கர்மம் செய்தபின்னும், மயானத்திற்கு சென்று வந்தால் மட்டும் தெற்கு நோக்கி நின்று குளிக்கலாம். மேற்கு திசை நோக்கி நின்று குளித்தால் உடல் நோவு வரும்).

தினமும் கங்கா ஸ்நானம் செய்யமுடியும். குளிக்கும் முன் ஒரு குவளை தண்ணீரில் மோதிர விரலால் ஓம் என்று த்யானம் செய்து எழுதுங் கள். அந்த நீர் அப்போது முதல் கங்கை நீராக மாறி விடும்.

ஒரு நிமிட த்யானத்தில் "இந்த உடலுக்குள் நீங்களே வந்திருந்து, இதை உங்களுக்கு செய் யும் அபிஷேகமாக ஏற்றுக்கொள்ளுங்கள்" என்று இறையிடம் வேண்டிக்கொண்டு குளித்தால், உள்பூசையின் அங்கமாக இறைவனுக்கு அபிஷேகமும் ஆகிவிடும். குளிப்பது, உண்மை யிலேயே நாமாக இருக்காது.

அக்னி எப்போதும் மேல்நோக்கியே பயணிக் கும். உடலுக்குள் இருக்கும் அக்னி கீழிருந்து மேல் ஏறுவது தான் சரி. தண்ணீரை கால் முதல் மேல் நோக்கி நனைத்து வந்து கடைசியில் தலையில் ஊற்றிக் கொள்ளவேண்டும்.

நமது மண்டை ஓடுக்கு எப்படிப்பட்ட அக்னி யின் வேகத்தையும் தாங்குகிற சக்தி உண்டு.

காலிலிருந்து பரவும் குளிர்ச்சி மேல் நோக்கி பயணிக்கும் போது உள் அக்னியானது தலையை நோக்கி பயணிக்கும் அதுவே சரியான முறை.

தலை முதல் கால் வரை உள்ள பின் பாகத்தை "பிரஷ்டம்" என்பர். அதில் நம் முதுகு பாகம் தான் மிகப்பெரியது. அங்கு தான் அக்னியின் வீச்சம் கூடுதல் வேகமாக பரவும். ஆதலால், குளித்து முடித்தவுடன், முதலில் முதுகு பாகத்தைதான் துவட்ட வேண்டும்.

துவலையை (துண்டு) குளிக்கும் நீரிலே நனைத்து பிழிந்து துவட்டுவது தான் உத்தமம்.

அனேகமாக, அனைவரும் ஈரம் படாத துண்டைத்தான் உபயோகிப்பீர்கள். உலர்ந்த துணியானது உள் சூட்டை வேகமாக பரவச் செய்து பல வித உள் நோவுகளை உருவாக்கும்.

பிறருடன் வாய் திறந்து பேசக் கூடாத மூன்று நேரங்களில் ஒன்று, குளிக்கும் நேரம்.

மௌனத்தை கடைபிடிக்கலாம், அல்லது மன தளவில் தெரிந்த ஜெபத்தை செய்யலாம்.

குளிப்பதினால், பஞ்ச இந்த்ரியகளால் செய்த தவறுகளினால் நமக்குள் சேர்த்து வைத்துள்ள கர்மாக்கள் களையப் பெறுகிறது. தண்ணீர் உடலை தழுவி, கழுவி சுத்தப்படுத்தி, நம்மை, நம் மூலத்திற்கு அழைத்துச் செல்லுகிறது. குளித்த பின் நாம் இருக்கும் நிலையே மனிதனின் சுத்த நிலை. அதை உணர வேண்டும்.

குளிக்கும் போது, வாயில் கொள்ளளவு நீரை வைத்து குளித்த பின் துப்புவதால், கண்டத்துக்கு மேல் (கழுத்துக்கு) வருகிற நீர் சம்பந்தமான கட்டுகளை, நோய்களை தவிர்க் கலாம். வாயில் இருக்கும் நீர் மேல் நோக்கி எழும்பும் அக்னியின் வேகத்தை எடுத்து விடும்.

நீர் நிலைகள், குளம், ஆறு, கடல் இவைகளில் எல்லா தேவதைகளும், பெரியவர்களும் அரூப மாக ஸ்நானம் செய்வதாக கூறுகிறார்கள். நாரம் என்கிற தண்ணீரில் நாராயணன் வாசம் செய்வதாகவும் சொல்வார்கள். ஆதலால், ஓடி சென்று அதில் குதிக்காமல், கரையில் நின்று, சிறிது நீரை எடுத்து தலையில் தெளித்தபின், நீர் கலங்காமல், ஒரு இலை நீரில் விழுகிற வேகத்தில் மெதுவாக இறங்கி சென்று குளிக்கவேண்டும்.

நீரில் காரி உமிழ்வதோ, துப்புவதோ கூடாது. நீரின்றி ஒரு உயிரும் இல்லை. நீரை விரயம் செய்ய கடன் அதிகரிக்கும். உப்பு நீர் ஸ்நானம் திருஷ்டி தோஷங்களை அறுக்கும். வெள்ளியன்று நீர்நிலைகளில் குளிப்பது நல்லது.

– இரா.சுதாகர், இராமன்நாடு



# குரு



நவீன விஞ்ஞான உலகில் ஆசிரியர் இல்லாமலேயே, நூற்றாண்டுகளாக நமக்குக் கிடைத்துள்ள ஞானத்தின் உதவி இல்லாமலேயே குழந்தைகளை கல்வி கற்கச் சொன்னால் என்ன ஆகும்? நம் வாழ்நாள் முழுவதும் எந்த முன்னேற்றமும் ஏற்படாமல் எந்த விஷயத்தையும் கற்க முடியாமல் போய்விடும். அல்லது தவறான பாதையில் போக நேரிடும். அதேபோல், ஆன்மீகத்திலும் நமக்கு வழிகாட்ட ஒரு குரு தேவை. எந்தத் துறையின் வழிகாட்டியாக இருந்தாலும் அத்துறையில் சிறந்தவராக இருத்தல் வேண்டும். ஆன்மீகப்படி, ஆன்மீகத்தில் சிறந்த ஒருவரே குரு எனப்படுகிறார். அவர் ஏற்கனவே ஒரு குருவின் வழிகாட்டுதலின்படி ஆன்மீகப் பயணம் மேற்கொண்டு விச்வ மனம் மற்றும் விச்வ புத்தியோடு ஒன்றியவர்.

ஆன்மீக வழிகாட்டி அல்லது குருவின் விளக்கம்:

ஒரு நாட்டின் அரசாங்கம் சிறந்த முறையில் நடைபெற பல்வேறு துறைகள் இருப்பதைப் போன்றது இது. எப்படி படிப்பறிவை வழங்க கல்வித்துறை உள்ளதோ அதேபோல் ஆன்மீக கல்வியறிவை வழங்கவும் ஆன்மீக முன்னேற்றமடையச் செய்யவும் உதவும் கடவுளின் அம்சமே குரு. இதுவே கடவுளின் நிர்குண குருதத்துவம். இந்த நிர்குண குருதத்துவம் இந்த பிரபஞ்சம் முழுவதும் நிறைந்து, இவ்வுலகிலும், இறந்த பின்னும் நம்முடனேயே உள்ளது. குரு தத்துவத்தின் விசேஷ அம்சம் என்னவென்றால் நம்முடனேயே இருந்து நம்மை உலக வாழ்க்கையிலிருந்து ஆன்மீக வாழ்க்கைக்கு உயர்த்துகிறது. நம் தகுதிக்கேற்ப குரு நம்மை வழி நடத்தி பொறுமை, ச்ரத்தை, கவனம், கருணை போன்ற குணங்களடையச் செய்கிறார்.

‘கு’ என்றால் இருட்டு ‘ரு’ என்றால் வெளிச்சம்

இருட்டில் இருந்து வெளிச்சத்துக்கு அதாவது அஞ்ஞானத்தில் இருந்து ஞானத்துக்கு அழைத்துச் செல்பவர் குரு. நம்முடைய அறியாமை என்கிற இருட்டை நீக்குபவர் குரு. அருவமாகிய கடவுள் குரு ரூபத்தில் உருவமாக நம்முன் தோன்றுகிறார்.

ஆசிரியர் மற்றும் குரு ஆசிரியர் வார்த்தைகள் மூலம் ஒரு குறிப்பிட்ட நேரம் மட்டுமே கற்றுத் தருகிறார். குரு என்பவர் 24 மணி நேரமும் தொடர்ந்து வழிகாட்டுதலை அளிக்கிறார். அவருடைய வழிகாட்டுதல் வார்த்தைகள் மூலமாகவும் இருக்கும் அதற்கு அப்பால் கூட இருக்கும். குரு தன் சிஷ்யன் எந்த சூழ்நிலையில் இருந்தாலும் பாதுகாப்பார். ஆனால் ஆசிரியர் தன் மாணவனின் சொந்த வாழ்க்கை பற்றி கவலைப்படமாட்டார். சுருக்கமாக சொல்ல வேண்டுமென்றால் குரு என்பவர் சிஷியனின் வாழ்க்கை முழுவதும் பரவி இருக்கிறார்

ஆன்மீக சொற்பொழிவு வழங்குபவர்கள் மற்றும் குரு சொற்பொழிவாளர்களின் பேச்சு ஏற்கனவே தயாராக இருக்கும் மற்றும் செயற்கையாக இருக்கும். ஆனால் குருவின் பேச்சு தானாக இயற்கையாக வெளிவரும். சொற்பொழிவாளர்களின் பேச்சு புத்தியின் மூலம் வெளிப்படும் அதனால் ஸ்தூலமாக இருக்கும் குருவின் பேச்சு ஆத்மாவில் இருந்து வெளிப்படுவதால் சைதன்யம் நிறைந்திருக்கும். சொற்பொழிவாளர்கள், துறவிகள் சொல்லியவற்றை உதாரணமாக காட்டுவார்கள். குரு தன்னுடைய ஆத்ம அனுபூதியை அடிப் படையாக கொண்டதை உதாரணமாக சொல்வார். சொற்பொழிவாளர்களின் பேச்சு கேட்பவருக்கு சிறிது நேரத்தில் அலுப்பு ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. மற்றும் அவர்கள் சந்தேகங்களுக்கு பதில் கிடைக்காமல் அப்படியே இருக்கும். ஆனால் குரு பேசும் போது அலுப்பு ஏற்படாது மற்றும் கேள்விகள் கேட்காமலேயே சந்தேகங்கள் தீர்க்கப்படும். சொற்பொழிவாளர்கள் பேசும் போது அனேகமாக அகங்காரம் இருக்கும். ஆனால் குருவிடம் அது கிடையாது.

இறைவன் மற்றும் குரு இறைவனும் குருவும் ஒருவரே. குரு இறைவனின் வெளிப்படும் தோற்றம். குருவின் வெளிப்படாத தோற்றம் இறைவன். ஒரு வங்கிக்கு பல கிளைகள் இருக்கும். அவரவர் வசதிக்கு ஏற்ப அருகாமையில் இருக்கும் கிளையில் பணத்தை போட்டு வைப்போம். இதற்காக அந்த வங்கியின் தலைமை அலுவலகத்துக்கு செல்ல வேண்டிய அவசியம் இல்லை.

அது போலவே ஆன்மீக உணர்வு, பக்தி, சேவை, தியாகம் முதலியவற்றை கண்களுக்கு புலப்படாத இறைவனுக்கு செலுத்துவதை விட கண்களுக்கு புலப்படும் இறைவனின் வெளிப்படும் தோற்றமாகிய குருவுக்கு செலுத்துவது சுலபம். எப்படி எந்த கிளைகளில் பணத்தை போட்டாலும் அது தலைமை அலுவலகத்தை சேர்கிறதோ அது போல் குருவுக்கு செய்யும் சேவை முதலியன இறைவனை அடைகிறது.

குருக்ருபாயோகம் குருவின் அருளால் இந்த ஆத்மா பரமாத்மாவுடன் ஐக்கியமாவதற்கான வழி அல்லது பாதை. மலை ஏறும் போது நாமாக ஏறினால் நிதானமாக ஏறுவோம் மற்றும் தவறான பாதையில் கூட ஏற வாய்ப்பு இருக்கிறது. ஆனால் மேலே இருந்து ஒருவர் கயிறு போட்டால் அதை நம்பிக்கையுடன் பிடித்துக் கொண்டு ஏறினால் நாம் சரியான பாதையில் போவோம் அதே நேரம் மேலே இருந்து அவர் இழுப்பதால் நம் முன்னேற்றம் மிக விரைவாக இருக்கும்.

குரு தத்துவம் ஒன்றுதான் வெளிபுற உருவ அமைப்பில் வேறுபட்டாலும் உட்புறம் அனைத்து குருவும் ஒரே மாதிரிதான் இருப்பார்கள். மாடுகள் பல நிறங்களில் இருந்தாலும் அவை கொடுக்கும் பால் எப்படி வெண்மையாக பரிசுத்தமாக இருக்கிறதோ அது போல் எல்லா குருவிடமும் இருப்பது ஒரே குருதத்துவம். கடல் அலைகள் எப்படி எப்பொழுதும் கரையை நோக்கியே வருகின்றதோ அது போல் அந்த பிரம்மனின் அலைகள் அதாவது குருவும் சமுதாயத்தை நோக்கியே வருகிறார்.

குருபூர்ணிமா ஒவ்வொரு வருடமும் ஆஷாட பூர்ணிமா அன்று குருபூர்ணிமா கொண்டாடப்படுகிறது. இதை வியாச பூர்ணிமா என்றும் கூறுவார்கள்.

இந்த நாளில் குரு தத்துவம் 1000 மடங்கு அதிக செயல்பாட்டில் உள்ளதால் சிஷ்யர்கள் மற்றும் சாதகர்கள் மிகுந்த பக்தி பாவத்துடன் குருபூர்ணிமாவுக்காக செய்யும் சேவையின் மூலம் 1000 மடங்கு அதிக பலனை பெறுகிறார்கள். இந்த ஜகத்துக்கெல்லாம் குருவாக பகவான் ஸ்ரீகிருஷ்ணர் இருப்பது போல் இந்த கலியுகத்திற்கு ஆதி குருவாக விளங்குவது ஸ்ரீ வியாஸ பகவான். அவரே வேதங்களை நான்காக உலகிற்கு பகுத்துக் கொடுத்தார். அதனால் குருபூர்ணிமா அன்று வியாச பீடத்தில் வியாச பூஜை நடை பெறுகிறது. அன்று அவரவர் வணங்கும் குருவிற்கு பூஜை செய்யப்படுகிறது.

நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து நம் உடல், பொருள், மனம், புத்தி ஆகியவற்றை குரு சரணங்களில் அர்ப்பணம் செய்து ஸத்சேவையில் ஈடுபட்டு குருவின் திருவருளுக்கு பாத்திரமாக வேண்டும் என்பதே நம்முடைய பிரார்த்தனை. இந்த வருடம் ஆடி மாதம் 11தேதி ( ஜூலை 27), வெள்ளிக்கிழமை, வருகிறது.

விசேஷ சத்சங்கம் நடக்க இருக்கிறது
தேதி: ஜூலை 29, ஞாயிற்றுக்கிழமை
நேரம்: மாலை, 68 மணி
இடம்: Dr.Ambedkar Academy
73, L - Block, 24th, street
Anna Nagar East, Chennai-600102.
தொடர்பு கொள்ள : 9380949626

நீங்கள் உங்கள் குடும்பத்துடன் வந்து இந்த அரிய சத்சங்கத்தில் கலந்துக்கொள்ளும் படி அன்புடன் அழைக்கிறோம்.

# புதுப்பிக்கப்படும் சிவாலயங்கள்

# சென்னை சைவக்குழுவின் சிவத்தொண்டு






தமிழகத்தில் உள்ள ஆலயங்களில் ஒருசில இன்று இருந்த தடம் இல்லாமல் மறைக்கப்பட்டு வரும் சூழ்நிலையில் உள்ளது.

சிவாலயங்கள் நிறைந்த தமிழகத்தில் தற்போது பல ஆலயங்கள் இருந்த தடம் இன்றி உள்ளது வேதனையான ஒன்றாக இருந்தாலும், ஒரு சில கோயில்கள் தற்போது ஒருசில அன்பர்களால் புதுப்பிக்கப்பட்டு வருவது சற்று ஆறுதலான விஷயம்...

இந்த வகையில் தற்போது தமிழகத்தில் பல்வேறு அமைப்புகள், குழுக்கள், இதுபோன்ற பாழைந்த கோவில்களை புதுப்பிக்கும் பணியில் தங்களை ஈடுபடுத்திவருவது சற்று ஆறுதலான விஷயம். அந்த வகையில் சென்னை சைவக்குழு என்ற அமைப்பினர் இதுவரை பல கோயில்களை புதுப்பித்து வருகின்றனர்.

அவர்கள் தற்போதைய எளிய பணியினைப் பற்றி அமைப்பின் நிறுவனர் திருமதி செல்வி ராமலிங்கம் என்பவர் கூறும்போது...

"நமது சென்னை சைவ குழுவின் மூலம் இப்போது ஒரு சிவாலயம் எழுப்ப முடிவெடுத்துள்ளோம்....

சுமார் 20002500 ஆண்டுகள் பழமையான சிவலிங்க திருமேணி 180 வருடங்கள் பூஜைகள் ஏதும் இல்லாமல் புதருக்குள் அமர்ந்திருந்தார், செங்கல்பட்டு மதுராந்தகம் இடையில் படாளம் கூட்டு ரோட்டிலிருந்து வேடந்தாங்கல் செல்லும் சாலையில் திருமலை வையாவூர் பெருமாள் கோவிலுக்கும் முன்பு உள்ளது...

இவரை சென்ற மாதம் புது ஆதாரபீடம் செய்து பிரதிஷ்டை செய்துள்ளோம் தற்காலிக குடில் அமைத்து தினசரி பூஜைகள் நடந்துவருகிறது, கற்கோயில் கட்ட முடிவெடுத்து அஸ்திவாரம் எடுத்து வைத்துள்ளோம்...." என்று அவர்கள் செய்த பணியைப் பற்றி புகைப்படத்தையும் நமது இதழுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

இத்தலத்தைப் பற்றி மேலும் அறிந்து கொள்ள...

**சென்னை சைவ குழு**

**எண்: 08428310845, 08428310865**





www.aanmeegamalar.com






www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com

# மின்னூல் வடிவத்தில்

ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தின்

அனைத்து பிரதிகளையும் படித்து மகிழ...

ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

www.aanmeegamalar.com

MAGZTER
DIGITAL MAGAZINE STORE
TAP · READ · ENJOY

இணையதளங்களை பார்க்கவும்...

aanmeegamalar.com

இணையதளத்தின் செய்திகளை

உலகின் அனைத்து

மொழிகளிலும்

செய்திகளைத் தரும்

dailyhunt

மொபைல் அப்பில் உடனுக்குடன்

தெரிந்து கொள்ளலாம்.